Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 03 திங்கட்கிழமை (16.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :50



இடம்பெயர்ந்து வன்னிக்குச் செல்லும் மக்களுக்கென முகமாலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ள செயலகத்தில்.... (ஒ-415)

## ஊர்காவற்றுறையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.16

நேற்றுமுன்தினம் ஆயுததாரிகளால் பிடித்துச் செல்லப்பட்ட நபர் நேற்றுக்காலை இறந்துகிடந்தார்.

ஊர்காவற்றுறை பருத்தியடைப்பைச் சேர்ந்தவரான தர்மராஜா தர்மசீலன்(வயது31) என்பவரின் சடலமே நேற்று சுருவில் வீதியில் உள்ள கரம்பன் சண்முகநாதன் வித்தியாலயத்திற்கு அண்மையில் மீட்கப்பட்டது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையாரான இவர், தனது நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கிருந்தபோது நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டினுள்

(12ஆம் பக்கம் பார்க்க)



செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் புதிய வளாகத்தை தலைவர் வே.பிரபாகரன் நேற்றுத் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை நாடாளுமன்றக் குழு விசாரிக்கும்!

## அதனைச் சிக்கவைக்க வலைவிரிப்பு

கொழும்பு, ஜனவரி 16

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்டறிவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு, 'TRO' எனப்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை விசாரணைகளுக்குட்படுத்தி, அதன் கணக்கு வழக்குகளை ஆராயத் தீர்மானித்திருக்கிறது என நம்பகமாகத் தெரியவருகின்றது.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் முக்கிய பிரமுகர்கள் பலர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை எப்படியேனும் தெரிவுக்குழு விசாரணையில் சிக்க வைத்து, மாட்ட வைப்பதற்கான வலை விரிப்பில் மும்முரமாக இருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

தமிழர் தாயகப் பகுதியில் அதிக புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இக்கழகம், புலிகளின் உப அமைப்பு என்று குற்றம் சாட்டும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலரே இதனை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகள் மூலம் எப்படியேனும் முடக்கிவிடத் திட்டமிட்டிருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிறுத்தப்படுமாயின், அது தொடர்பான தேவைப்பாட்டுக்கு அமைய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள், வருடாந்த கணக்கறிக்கைகள் என்பன தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நாடாளுமன்றத்திற்கும் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் கட்டுக்கோப்பின்றியும், எதேச்சதிகாரமாகவும் செயற்படுவதால் பல்வேறு மோசடிகள் இடம்பெறுகின்றன எனவும், பெருமளவான நிதித் துஷ்பிரயோகத்திற்கு அடித்தளமிடும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் இளைஞர் சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம், ஜன 16

தென்மராட்சி, வரணியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கோயில் குடியிருப்பு குடமியன் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை - யோகராசா (வயது - 26) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார். இவர் தனது கிராமத்தில் உள்ள கோயில் ஒன்றிற்குச் செல்லும் போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று கூறப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ம-13-14-15-16-78-86-117-180)

## திருகோணமலையில் ஹர்த்தால் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது

திருகோணமலை,ஜன.16

திருகோணமலையில் இராணுவ அட்டகாசங்கள், கெடுபிடிகள், படை நெருக்குவாரங்கள் ஆகியவற்றை அடுத்து கடந்த இருவார காலமாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஹர்த்தாலை தற்காலிகமாகக் கைவிடுவதற்கு தமிழர் தரப்பு இணங்கியிருக்கின்றது.

பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், திருகோணமலைத் தமிழ்ச் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுப் பகல் சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட ஐந்து முக்கிய விடயங்களை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்குப் பாதுகாப்பு அதிகாரிகள் நேரடியாக உறுதி வழங்கினர்.

- இதனையடுத்து அந்த விடயங்களை நடைமுறைப்படுத்தி, சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பளிக்கும் முகமாக ஹர்த்தாலைத் தற்காலிகமாகக் கைவிடுவதற்குத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு ஆளுநராக கடற்படை முன்னாள் அதிகாரி?

கொழும்பு,ஜன.16

கடற்படையின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரியான றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமவை வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார் என்று தெரிகின்றது.

தற்போதைய ஆளுநரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான டிரோன் பெர்னாண்டோ, வெளிவிவகார அமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்படுவார் என்றும் தெரிகின்றது.

கடற்படைத் தளபதிக்கு அடுத்த நிலையில் சிரேஷ்ட உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர் றியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம. கடற்படைத் தளபதி நியமனத்தில் ஏற்பட்ட கசப்புணர்வை அடுத்து அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றிருந்தார்.

அவர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புதிய ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு வசதியாக தற்போதைய ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ அடுத்த வாரத்தில் தமது பதவியிலிருந்து விலகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சித் தேர்தலையொட்டி

## மஹிந்த – சந்திரிகா மோதல் மீண்டும் வெடிக்கும் நிலை!

கொழும்பு, ஜன.16

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விவகாரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும், முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்குமிடையில் முரண்பாடு உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டுமென்ற அபிப்பிராயம் கொண்டுள்ள கட்சித் தலைவி சந்திரிகா, வேட்பாளர் தெரிவின்போது பல புதியவர்களுக்கு இடமளிக்குமாறு கட்சியின் செயலாளரைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுங்கட்சி எம்.பிக்கள் கூட்டம் இன்று

கொழும்பு,ஜன.16

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்றுமாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மாலை ஐந்து மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், இவ்வாரம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

இவ்வருடத்தில் இடம்பெறும் முதலாவது நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இதுவாகும். ஆளுங்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பும் கூடுகிறது

கொழும்பு,ஜன.16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டமும் இன்று நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தின்போது, திருமலையில் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றில் தனியான விவாதத்துக்குக் கோருதல், காலஞ்சென்ற ஜோசப் எம்.பியின் வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பன போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இதேவேளை - நாளைய தினம் நடைபெற

(12ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மேஜர் சோதியாவின் 16ஆம் ஆண்டு நினைவையொட்டி மேஜர் சோதியா படை அணியினர் நடத்திய கராத்தே போட்டியின் ஒரு காட்சியை முதலாவது படத்திலும், தைப் பொங்கல் தினத்தையொட்டி வட போர் முனை முன்னரங்க நிலைகளில் உள்ள போராளிகள் பங்கேற்ற துப்பாக்கி சுடும் போட்டியின் ஒரு கட்டத்தை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஐ.தே.கவின் உள்கட்சி நெருக்கடி: தீர்வு பற்றி ரணில் இன்று அறிவிப்பு

கொழும்பு,ஜன.16

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழுந்திருக்கும் நெருக்கடி நிலைக்கான தீர்வுகள் பற்றியும், கட்சியின் மறுசீரமைப்புச் செயற்பாடு குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இன்று அறிவிக்கவுள்ளார்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே ஐ.தே.க. தலைவர் இந்த அறிவிப்பை வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முற்றுமுழுதான மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கட்சியின் அதிருப்தியாளர்கள் பலர் கருதும் அதேவேளை, இதனடிப்படையில் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தலைமைப் பதவியில் அமர்த்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி வருகின்றனர். மறுபுறம் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தலைமைப் பதவியில் இருக்க வேண்டுமெனவும் மறுசாரார் வலியுறுத்தித் தெரிவித்து வருகின்றனர்.

ஐ.தே.கவின் தலைவராக ரணில் தொடர்ந்து பதவிவகிக்க வேண்டுமெனக் கட்சியின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமயவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதேபோல், கட்சியின் மாவட்டக் கிளைகள் பலவும் ரணிலை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இந்நிலையில் இந்த நெருக்கடிக்கு முடிவு கட்டி, கூடுதல் அதிகாரம் கொண்ட தவிசாளர் பதவியை கரு ஜயசூரியவிற்கு வழங்க ஐ.தே.க தலைவர் தீர்மானித்திருக்கிறார். அந்த அறிவிப்பே இன்று வெளியிடப்படவுள்ளதாகத் தெரிகிறது. (க)

# மன்னார் - பூநகரி வீதியில் போக்குவரத்து தடை

பூநகரி,ஜன.16

பஸ் சக்கரம் சேற்றில் புதைந்ததினால் மன்னார் - பூநகரி பிரதான வீதியில் போக்குவரத்து முடங்கியது.

மன்னார் - பூநகரி பிரதான வீதியில் போக்குவரத்தில் ஈடுபட்டுவரும் பஸ் இவ் வீதியின் நடுவே சேற்றில் நேற்றுமுன்தினம் மாலை புதைந்தது. இதனால் நேற்றுமுன் தினமும் நேற்றும் இவ்வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

பல மைல்கள் சுற்றி ஜெயபுரம் பிரதான வீதியூடாக பொதுமக்கள் போக்குவரத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (6-291)

# முகமாலையில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.16

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்று இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று தனது அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுமாலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்தவரான திருநெல்வேலியைச் சேர்ந்த பேரம்பலம் நிமலராஜன் என்பவரே முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டார் என்று உறவினரால் முறையிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது தொடர்பாக பலாலி படைத்தலைமையகத்துடன் தொடர்புகொண்டு தான் கேட்டபோது, இந்தக் கைது சம்பந்தமாக தமக்கு தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் -

இது தொடர்பாக தாம் விசாரிப்பார்கள் என்றும் படைத்தரப்பினர் தமக்குக் கூறினர் என கஜேந்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ஒ-6)

# வடக்கின் பாதுகாப்பு நிலை குறித்து அமெரிக்க அதிகாரிகள் இருவர் ஆய்வு

கொழும்பு,ஜன.16

பாதுகாப்பு நிலை குறித்து ஆய்வுகளையும், ஆயுதப் படைகளுக்குத் தேவைப்படும் யுத்தத் தளபாடங்கள் பற்றிய மதிப்பீடொன்றையும் மேற்கொள்வதற்காக கடந்த 10ஆம் திகதி அமெரிக்க அரசின் விசேட பிரதிநிதிகள் இருவர் குடாநாட்டுக்கு வந்து சென்றுள்ளனர்.

இத்தகவலை 'லக்பிம' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்தவர்களான பாதுகாப்பு ஆலோசகர் ஜெம் ஒஸ்லே, அரசியல் பிரிவின் ஆலோசகரான எவன்ஸ் விலியம்ஸ் ஆகிய இருவருமே குடாநாடு வந்து திரும்பினர் என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் பாதுகாப்புப் படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் பீ.எச்.சந்திரசிறியைச் சந்தித்து பாதுகாப்பு நிலை பற்றியும், ஆயுதப் படைகளின் தேவைகள் பற்றியும் ஆராய்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-206)

# படையினரின் அத்துமீறல் குறித்து ரவிராஜ் எம்.பியிடம் முறையிடலாம்

யாழ்ப்பாணம்,ஜன.16

அரச படைகளின் அத்துமீறல்கள் குறித்து தனது அலுவலகத்தில் பொதுமக்கள் முறையிடலாம் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் படையினர் மேற்கொள்ளும் அத்துமீறல்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத் திறக்கவுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டு காணாமல் போவோர், மக்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் பாதிக்கப்படுவோர் இவ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யலாம்.

இந்த அலுவலகம் திறக்கப்படும் வரை யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் விசேட கருமபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச மக்களுக்காக சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் அலுவலகத்தில் விசேட கருமபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் நேரடியாக இவ் அலுவலகத்தில் முறையிட முடியும். 021 222 3395 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ 021 222 6261 என்ற தொலைநகல் இலக்கம் மூலமாகவோ முறைப்பாடு செய்யலாம் இவ்வாறு ந.ரவிராஜ் எம்.பி. தெரிவித்தார்.

# முத்தமிழ் கலையரங்கம் இன்று

பரந்தன்,ஜன.16

மூத்த தளபதி கேணல் கிட்டு நினைவு முத்தமிழ் கலையரங்கம் இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி புலிகளின் குரல் அமலன் அரங்கில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில், சிறந்த வானொலி மன்றத்தினர், கலைஞர்கள் நாளாந்த அவதானிப்பு வினா விடைப் போட்டியில் வெற்றிபெற்றோர் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

2000ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புலிகளின் குரல் வானொலி மன்றங்கள் ஊடாக மக்களின் கலை வெளிப்பாடுகள் புலிகளின் குரல் வானொலி ஊடாக ஒலிபரப்பப்பட்டு வருவதுடன் மாதாந்தம் மன்றங்களின் கலை நிகழ்ச்சிகளின் அரங்கேற்றமாக முத்தமிழ் கலையரங்க நிகழ்ச்சி வருடந்தோறும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-352)

# வி.பி.கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2ஆவது ஆட்டத்தில் ஆஸி.தோல்வி

பிரிஸ்பேன்,ஜன.16

வி.பி கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் நேற்று ஆஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் மோதிக்கொண்டன. பரபரப்பாக நடைபெற்ற இவ் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் மைதானத்தில் நடைபெற்ற இவ்வாட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆஸி. அணி 49.5 ஓவர்களில் 228 ஓட்டங்ளைப்பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

229 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவை என்றிருந்தவேளை மழைகுறுக்கிட ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. மீண்டும் ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் இலக்கை அடைந்து தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய முன்னணித் துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்த தென்னாபிரிக்கப் பந்துவீச்சாளர் பொலக் தெரிவுசெய்யப்பட்டார்.

முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களான நிற்னி, நெல் போன்றோர் இல்லாமலேயே ஆஸி. அணியை தென்னாபிரிக்கா வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. (ம-6)

# இரவுக் காவலாளி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜன.16

கோப்பாய் பிரதேச செயலகத்தில் இரவு நேரக் கடமைக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக்காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரவுக் காவலாளியாகப் பணியாற்றிய புத்தூர் கிழக்கைச் சேர்ந்த எஸ்.லோகநாதன் (வயது 50) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை வழமைபோன்று கடமைக்குச் சென்ற இவர் நேற்றுக்காலை வீடுதிரும்பவில்லை. இவரைக் காணவில்லை என்று தேடிச்சென்ற உறவினர்கள் இவரது சடலத்தை பிரதேச செயலக வளாகத்தில் கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-86)

# பெரியபுலத்தில் கிரனேட் வீச்சு!

வலி.வடக்கு,ஜன.16

காங்கேசன்துறை வீதியில் உள்ள பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு அருகில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று நண்பகல் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் கைக்குண்டை வீசிவிட்டுச் சென்றனர் என்றும் - வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து காங்கேசன்துறை வீதி வழியாக போக்குவரத்து இரண்டு மணித்தியாலத்திற்கு மேல் தடைப்பட்டிருந்தது. (ஒ-86)






# இந்திய - பாக். இடையேயான முதலாவது டெஸ்ட்டுக்கு மழையால் இடையூறு

லாகூர், ஜன.16

இந்தியா - பாகிஸ்தான் அணிகளிற்கிடையில் லாகூரில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் மழை காரணமாக பாதிக்கப்பட்டது.

நேற்றைய தினம் முழுவதும் வெறுமனே 15 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன. நேற் [illegible] 145 ஓட்டங்களை [illegible] பெற்றிருந்தது.



மாட்டுப் பொங்கல் தினமான நேற்று தனது வளர்ப்பு மாட்டை அலங்கரித்து வீதியில் அழைத்து வருகிறார் ஒருவர். (படம்:வசந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்திலிருந்து ஒலிக்கும் குரல்

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய - குறிப்பாக - தமிழக - தரப்பின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றம் தென்படுவது ஈழத் தமிழர்களை பெருமூச்சு விட வைத்திருக்கின்றது.

சிங்கள, பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய காலத்தில் அதற்கு வலுவான அத்திபாரமளித்ததில் இந்தியாவினது - தமிழகத்தினது - பங்களிப்பு அதிகமானது; உயர்வானது.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அசைக்க முடியாத உறுதிபெற்று, ஸ்திரமுற்று, வலுவடைந்து நிற்பதற்கான அடித்தளத்தையும் புற நிலைகளையும் ஏற்படுத்தித் தந்ததில் தமிழகத்தின் பங்கு கணிசமானது.

புதுடில்லி இராஜதந்திரம் இழைத்த தவறினால் நிகழ்ந்த இந்தியப் படைகளின் ஈழ ஆக்கிரமிப்பு, அதன் பயனாக நேர்ந்த ராஜிவ் காந்தி மரணம் என்ற 'துன்பியல் நிகழ்வு' போன்றவை ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைத்தன.

அதனால் இரு தரப்பினரிடையேயான நல்லுறவு சீர்குலைந்தது என்றாலும் அது ஒரு தற்காலிகப் பின்னடைவே. 'தானாடாவிட்டாலும் தசையாடும்' என்பார்கள்; 'தண்ணீரை விட இரத்தம் கெட்டியானது' என்பார்கள். அதை மெய்ப்பிப்பதுபோல தமிழக மக்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான தொப்புள் கொடி உறவு இந்தச் சீர்குலைவுகளை எல்லாம் தாண்டி தனது வலிமையை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

ஈழத்தமிழர்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கும் ஆதரவான எழுச்சிப்போக்கு மெல்ல மெல்ல தமிழகத்தில் தலைதூக்க ஆரம்பித்திருப்பதை நாம் இன்று காண்கிறோம். இது வரலாற்று நியதியின் - நிர்ப்பந்தத்தின் - வெளிப்பாடேயன்றி வேறில்லை.

இந்த நிலையை உருவாக்கிய வெளிக்காரணிகள் பல. அவற்றில் ஒன்று 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி' என்றமாதிரி, ஈழத்தமிழர் விவகாரத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விழுந்தடித்து விஜயம் செய்த விவகாரமாகும்.

அந்தப் புதுடில்லி விஜயத்தை ஒட்டி, இலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகத் தமிழகத்தில் முளைவிடத்தொடங்கிய ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி இப்போது கொடிகட்டிப் பறக்கத்தொடங்கியிருக்கின்றது.

இலங்கையின் தமிழர் தாயகப்பிரதேசத்தில் சிங்களப் படைகளுக்கு எதிராக அதிரடித் தாக்குதல்கள் என்ற பெயரில் நடக்கும் திடீர் அடிகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட தமிழக ஊடகங்கள் மூன்று வாரங்களுக்கு முன்னர் தலைநகரில் கொழும்புத் தமிழர்களுக்கு எதிராக, நித்திரைப் படுக்கையில் வைத்து அவர்கள் - ஆயிரத்திற்கும் அதிகமானோரை - கைது செய்து, இழுத்துச் சென்று, பொலீஸ் நிலையங்களில் கிரிமினல்கள்போல நடத்தியமையைப் பரபரப்பாக வெளியிட்டு உண்மையை அம்பலப்படுத்தின.

அடுத்த வாரம், ஈழத்தமிழர் தாயகத்தில் இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் இராணுவக் கொடூரங்களுக்கு அஞ்சி அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்வது பற்றிய செய்திகளை அவை முன்னிலைப்படுத்தின.

தற்போது, இலங்கை அரச படைகளின் நெருக்குதல்கள் தாங்க முடியாமல் ஈழத்தமிழர்கள் தமிழகத்திற்குப் படகுகள் மூலம் அகதிகளாகப் போய் இறங்கி தஞ்சம் கோருகின்றமை பற்றிய விடயங்களுக்கு அவை முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இன்னும் நான்கு மாதங்களில் வரப்போகின்ற தமிழகச் சட்டமன்றத்தேர்தல்களின்போது இலங்கைத் தமிழர்கள் பற்றிய விவகாரமும் அதில் முக்கிய விடயமாகப் பேசப்படும் - முன்வைக்கப்படும் - என்பதும் துலாம்பரமாகி வருகின்றது.

புதுடில்லி தலைமையை வைத்துக்கொண்டு ஈழத் தமிழர்களுக்கும் அவர்களது ஏக அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகளுக்கும் 'சூடு' ஒன்று வைப்பதற்கு பௌத்த, சிங்கள பேரினவாதச் சக்திகளும் தென்னிலங்கை அரசும் எடுத்த முயற்சிகளுக்கு சரியான ஆப்பு வைக்கப்பட்டுவிட்டது என்பது உறுதியாகிவிட்டது.

தமிழகத்தைத் தளமாகக் கொண்ட ஈழத்தமிழர் ஆதரவு சக்திகளின் வெற்றிகரமான பங்களிப்பே இந்த உறுதி நிலைமை ஏற்படக்காரணம் என்பது கண்கூடு.

தமது அரசியல் பங்களிப்பை - செல்வாக்கை - சரியான முறையில் பிரயோகித்து, அதன்மூலம் -

புதுடில்லியும் - கொழும்பும் கைகுலுக்கி, ஒன்றிணைந்து ஈழத்தமிழர்களுக்குப் புரியக்கூடிய கெடுதலை, நடக்கவிடாமல் குழப்பிய பங்களிப்பு இந்தத் தமிழக சக்திகளின் செல்வாக்குக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு; உதாரணம்.

இத்தகைய பின்புல ஆதரவு தமிழகத்திலிருந்து உறுதியாகவும், தெளிவாகவும் ஈழத்தமிழர்களுக்குக் கிட்டும்போது, தமது இலட்சித்தை - இறுதி இலக்கை - ஈழத் தமிழர்கள் எட்டுவார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகின்றது.

# போர் மீண்டும் மூளுமானால் போஷாக்கின்மை சுனாமியைவிட மோசமாக மக்களைப் பாதிக்கும்

## எச்சரிக்கிறார் உலக உணவுத் திட்டப் பணிப்பாளர்

கொழும்பு,ஜன.16

இலங்கையில் மீண்டும் போர் வெடிக்குமானால் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தை விட மிக மோசமான உணவுப் பஞ்சமும் போஷாக்கின்மையும் மக்களைப் பாதிக்கும் என்று ஐ.நா. உலக உணவுத் திட்ட நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாகப் நெருக்கடி நிலவும் பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச்செல்லும் வாகன உரிமையாளர்கள் ஏற்கனவே பின்னடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்று அந்நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்ட அமைப்பின் இலங்கைப் பணிப்பாளர் ஜெஃப் ராப்ற் டிக் அந்தச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அறிகுறிகள் மிகமோசமாகவே உள்ளன. இது மிகவிரைவில் இன்னும் மோசமாகலாம். போர் மீளவும் தொடங்குமானால் ஆழிப்பேரலையால் ஏற்பட்டதைவிட போஷாக்குக் குறைபாடு மக்களைப் பெரிய அளவில் தாக்குவதாய் இருக்கும். 2002ஆம் ஆண்டு இரு பது ஆண்டுகால யுத்தம் ஓய்வுக்கு வந்த போது வடக்கு - கிழக்கிலிருந்த குழந்தைகளில் காள் பங்கினர் உணவுப்பற்றாக்குறையினால் வளர்ச்சி குன்றிப் போயிருந்தார்கள். ஐந்து வயதுக்குக் குறைவானவர்களில் அரைப்பங்கினர் தேசிய விகிதத்தில் இரண்டு மடங்கு நிறை குறைவாகியிருந்தனர்.

2005ஆம் ஆண்டில் போஷாக்கு நிலைமைபற்றிய ஆய்வு ஏதும் நடத்தப்படவில்லை. ஏனென்றால், உலக உணவுத் திட்ட நிறுவனம் ஆழிப் பேரலை பாதிப்பு மீள்கட்டுமானத்தில் அதிகம் கவனம் கொள்ளவேண்டியிருந்தது. பாடசாலைகளில் உணவு வழங்குவது மற்றும் வேறு உணவு வழங்கல் திட்டங்கள் ஓரளவு போஷாக்கின்மையக் குறைத்திருந்தாலும் போர் மீண்டும் மூண்டால் நிலைமை மிக மோசமாகிவிடும்.

திருகோணமலை, வவுனியா பகுதிகளின் எல்லைப் புறங்களின் நகரங்களில் உணவு சேமிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுப்பதற்கு யோசனை இருந்தாலும் ஏற்கனவே எமது அலுவலர்களின் நடமாட்டம் அச்சம் காரணமாக முடங்கியுள்ளது.

யுத்தம் ஆரம்பமானால் இராணுவம் நிலைகொண்டுள்ள வடக்குப் பகுதியிலும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னியிலும் பட்டினிக்குள்ளாகக்கூடியவர்களுக்கு உணவளிப்பதென்பது முற்றிலுமே முடியாமல் போகலாம்.

ஒரு பகுதி மக்கள் ஏற்கனவே தங்கள் இருப்பிடங்களைவிட்டு ஓடிவிட்டார்கள். ஒன்றில் போர் மூளப் போகின்றது என்ற பயம் அல்லது இராணுவத்தின் அட்டூழியக் குற்றச்சாட்டுக்கள் இதற்குக் காரணம். யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 800 அல்லது ஆயிரம் குடும்பங்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருப் பதாகவும் அதேபோல் திருகோணமலையிலிருந்தும் குடும்பங்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு ஓடியிருப்பதாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது - இவ்வாறு ராஃப் டிக் கூறியுள்ளார். (ப)

# கடற்படை வழங்கிய அடையாள அட்டைகளை எடுத்துவருமாறு தீவகமக்களுக்கு அறிவுறுத்து

## அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில்

ஊர்காவற்றுறை,ஜன.16

தீவுப்பகுதியை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள் அல்லைப்பிட்டியிலுள்ள கடற்படையினரின் சோதனைச் சாவடி ஊடாகப் பயணஞ்செய்யும் போது கடற்படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையினைத் தம்முடன் எடுத்துவரவேண்டும் எனப் பொலீஸார் மற்றும் கடற்படையினர் அறிவுறுத்திவருகின்றனர்.

அதேவேளை - தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் வன்னியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்தவேளை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகளில் வன்னியில் தற்காலிகமாகதங்கியிருந்த விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானவர்கள் மேற்படி சோதனைச் சாவடியூடாக பயணம் செய்கின்றபோது கடற்படையினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர்.

தற்சமயம் தீவுப்பகுதியிலிருந்து யாழ். நோக்கிச் செல்பவர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து தீவகத்தினுள் நுழைபவர்களும் அடையாள அட்டைகள் மற்றும் பொதிகளைப் பரிசீலனை செய்வதற்கென அல்லைப்பிட்டியில் உள்ள கடற்படையினர் விசேட சோதனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் மேலதிக கடற்படையினரும் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (எ-16)

# ரவிராஜ் எம்.பி.தமக்கு கொலை அச்சுறுத்தல் என கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்க்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரும், ஒட்டுப்படையினரும் பல இடங்களில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்திய போது நாடாளுமன்ற உறுப்பினர் பற்றிய தகவல்களை விசாரித்தனர் என பொது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறைப்பாடுசெய்திருந்தனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது விடயமாக முறைப்பாடு செய்துள்ளார்.

பலாலியில் உள்ள யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியுடன் தொடர்பு கொண்ட ரவிராஜ் எம்.பி. படையினருடன் உள்ள ஒட்டுப் படையினரை உடனடியாக அப்புறப்படுத்துமாறு - கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கனகன்புளியடிச் சந்தியில் பொலீஸ் சோதனை நிலையம் அமைந்திருந்த கட்டடத்திலிருந்து பொலீஸார் வெளியேறியதையடுத்து, அந்தக் கட்டடத்தில் படையினருடன் ஒட்டுப்படையினரும் இணைந்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்திவருவதாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-117)

# மாவடிச் சந்தியில் புதிய பஸ் தரிப்புநிலையம்

வட்டுக்கோட்டை,ஜன.16

வட்டுக்கோட்டை, மாவடிச்சந்தியில் தைப்பொங்கல் தினத்தன்று பஸ்தரிப்பு நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்களான முத்துக்குமாரு சறோஜினி, முத்துக்குமாரு ஐங்கரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்தப் பஸ் நிலையம் அமைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற மின்சாரசபைப் பொறியியலாளரும், மூளாய்கூட்டுறவு வைத்தியசாலையில் தலைவருமாகிய வி.வேலுப்பிள்ளை இந்தப் பஸ் தரிப்பு நிலையத்தைத் திறந்துவைத்தார். (எ-161)

# வைகோவின் 'சிறையில் விரிந்த மடல்கள்' கனடாவில் பொங்கல் விழாவில் வெளியீடு

ரொறன்ரோ,ஜன.16

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வைகோ எழுதிய "சிறையில் விரிந்த மடல்கள்" நூல் கனடா நாட்டின் ரொறன்ரோ நகரில் நடைபெற்ற தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.



தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால் கனடா முருகன் கோவில் விழா அரங்கில் தமிழ்ப் புத்தாண்டு விழா, (திருவள்ளுவர் ஆண்டு 2037) மற்றும் பொங்கல் திருநாள் நிகழ்வு வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. இதன் போதே வைகோவின "சிறையில் விரிந்த மடல்கள்" நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிறையில விரிந்த மடல்கள் நூலின் முதற்பிரதியை பிரபல வீடு விற்பனை முகவரும், தமிழ் உணர்வாளருமான உதயன் பொன்னுத்துரை பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின் போது தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில் பழ. நெடுமாறன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'தென்செய்தி' இதழின் கனடியப் பதிப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது. தென்செய்தி இதழின் முதற்பிரதியை, மாவீரர் 2ஆம் லெப். மேகலா அவர்களது தாயார் திருமதி. பாலசுப்ரமணியம் வெளியிட்டுவைக்க, தமிழ் உணர்வாளரும், பிரபல வணிகருமான பாபு பெற்றுக்கொண்டார். புரவலர் சிலர் உதவியோடு தென்செய்தி இதழ் கனடியத்தமிழர்களை இலவசமாகச் சென்றடையவுள்ளது.

நடனம், ஏடுதொடக்குதல், தூய தமிழ்ப்பெயர் தெரிவு, தமிழ்மொழியறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு எனப் பல நிகழ்ச்சிகள் இந்நிகழ்வின்போது இடம்பெற்றன. ஆண்டுதோறும் தூயதமிழ்ப் பெயர்கள் இரண்டு, குடவோலை மூலம் தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 500டொலர்கள் தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால் பரிசாக அளிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழியறிவுப் போட்டியில் முதலிடம்பெற்ற குழந்தைகளுக்கு தங்கப்பதக்கமும், பிற இடங்களைப் பெற்ற குழந்தைகளுக்கு, வெள்ளி, வெண்கலம் மற்றும் ஊக்குவிப்புப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ஐ)

## உதயவாக்கு

மற்றவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைவிட. நீ உன்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பதே உன்நிலையைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

ஓர் அறிஞர்.

## நாளை

தை 4
செவ்வாய்க்கிழமை
17.01.2006
திதி: திருதியை
முன்னிரவு: 09.37 வரை
நட்சத்திரம் : மதம்
பின்னிரவு : 05.29 வரை
சுபநேரம் : 11.05 - 12.35
ராகுகாலம் : 03.35 - 05.05
(யாவும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

மருதனார்மடம், உடுவில், மானிப்பாட பிரதான வீதியை முகப்பாகக் கொண்டதும் மருதனார்மடம் சந்திக்கும் உடுவில் மகளிர் பாடசாலைக்கும் இடையில் உள்ளதுமான ஒன்றரைப் பரப்பு (1½) காணி சுத்தமான உறுதியுடன் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்.

T.P.: 0777316634, 0773506451 (சி/47357)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் பூர்த்தியடைந்த ஜேர்மன் சிபேட் நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.ஜெகநீதன் சந்துஜன், மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி. 0773146104 (45373)

4½ மாதம் நிரம்பிய ஜேர்மன் சப்பேட் தொற்றுகள் நீக்கிய, புத்தகத்துடன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 43, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P.: 0776503120, 222 6552 (45379)

### சிறுகதை எழுதுவது எப்படி?

எல்லா மாணவர்களுக்கும் வேண்டியது. 10 சிறுகதைகளும் 11 கட்டுரைகளும் 60 சிறுகதைகள், 400 நாடகங்கள் உட்பட எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. (45380)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆரம்பகால மாணவியும் எமது பாடசாலையில் நீண்டகாலம் ஆசிரிய சேவை புரிந்து ஓய்வுபெற்றவருமான

**திருமதி சறோஜினிதேவி சிவனடியான்**

அவர்கள் 10.01.2006இல் காலமானார். அன்னாரது ஆன்ம சாந்திக்காகவும் குடும்பத்தினரின் மன அமைதிக்காகவும் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனின் பாதாரவிந்தங்களை சிரந்தாழ்த்தி கரங்கூப்பி வேண்டுகின்றோம்.

(45383) (24-11-45) பாடசாலைச் சமூகம்,
யா/ வேலணை கிழக்கு ம.வி.

### சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழக அபிவிருத்திக்காக 14-01-2006 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - இல.1862
இரண்டாம் பரிசு - இல.2451
மூன்றாம் பரிசு - இல.1858

05 ஆறுதல் பரிசுகள்

இல.2747, இல.2096, இல.2497
இல.3794, இல.3323

*பரிசில்களை 20-01-2006இற்கு முன்பதாக மதியம் 12 மணிக்குள் நிலையத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளவும்.*

(45385) (26-11-45-24) - செயலாளர்.

### கடை வாடகைக்கு

கொக்குவில் சந்தியில் இரு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: கஜன், 0773151616 (45375)

### கோழி விற்பனைக்கு

சொந்தப் பண்ணைக்கு வளர்க்கப்பட்ட ஒரு மாதம் வளர்ச்சிகொண்ட ''பிறிமா இனம்'' முட்டை இடும் இனக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. கல்பேட்ஸ், இறைச்சிக்கோழியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஞானசெந்தூரம், அபிராமி மகால், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. T.P.: 021 226 3403 (சி/47366)

### தவறிவிட்டது

மூக்குக்கண்ணாடி ஒன்று நீலநிறக் கூட்டுடன் வெள்ளிக்கிழமை 13-01-2006 மாலை முகமாலைச் சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மந்தாகினி தொலைத்தொடர்பு நிலையம், 406, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் (T.P. 222 3500) ஒப்படைத்துதவவும். (45368)

இருபாலைச் சந்தி, கோப்பாயைச் சேர்ந்த லோகேஸ்வரன் மயூரன் என்பவரது தே.அ.அ. (851383697V) யாழ்ப்பாணம் நாதன்ஸ் திரை அரங்குக்கு அண்மையில் உள்ள வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் நியூராகம்ஸ் பட்டுச்சோலை, 7,8,24, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். அல்லது 021 222 7179 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (45381)

## சிறுவர் கலைப் பயிலகம்

யாழ்ப்பாணம்,ஜன.16

சிறுவர்களின் கலை ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் செயல்திறன் அரங்க இயக்கத்தினால் சிறுவர்களுக்கான கலைப் பயில்களம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள நுண்கலைப் பயிற்சிப் பயிலகத்தில் 8 வயது தொடக்கம் 12 வயது வரை உள்ள சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.

இப்பயிற்சியில் நாடகம், மிருதங்கம், நடனம், வாய்ப்பாட்டு பாரம்பரியக் கூத்துகள், வயலின் வகுப்புகள் நடைபெறும். வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக இப்பயிற்சிகள் வழங்கப்படும்.

நுண்கலை வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் (மாலை நேரம்) அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்கத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் பயிற்சி பெற விரும்புபவர்கள் 30.01.2006ஆம் திகதிக்கு முன்பதிவுகளை செயல்திறன் அரங்க இயக்க நிறுவனத்தில் மேற்கொள்ளவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)


அச்சுவேலியில் தைப்பூசத் திருநாளில் (11.02.2006) குதூகல ஆரம்பம்

## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக்கொண்டது.
- 1000 பேர் ஒரே நேரத்தில் கதிரையில் அமர்ந்திருந்து கண்டுகளிக்கலாம்.
- 300 பேர் ஒரே நேரத்தில் கதிரை, மேசையில் இருந்து உண்டு மகிழலாம்.
- குளிரூட்டப்பட்ட திருமணக்கார், வீடியோ, போட்டோ வசதிகள்
- விசேடமான சமையல்காரர்கள் விரும்பிய வகை உணவு வசதி
- தனித்துவமான மேடை ஒழுங்குகள் - இசை நிகழ்வுகள்
- திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டுவிழாக்கள் மற்றும் வைபவங்களுக்கு முன்கூட்டி பதிவுசெய்துகொள்ளவும்.

**வீடியோ கலாமினி**
அச்சுவேலி.
060 2212431 ,0773053080
(சி/47365) (24-11-45)


## சொலிடாரின் சுனாமி கண்காட்சி

சொலிடார் நிறுவனமானது சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் தம்மால் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணிகளைப் பிரதிபலிக்கும் கண்காட்சி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றது.

இக்கண்காட்சியானது சிறார்களின் கைவண்ணங்களினால் உருவாக்கப்பட்ட படங்கள் உட்பட 200 வரையான புகைப்படங்களை உள்ளடக்கியதாகும். இது கடந்த காலங்களில் நோர்வே, பெல்ஜியம், இத்தாலி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் நடைபெற்று இறுதியாக இங்கும் கால்பதிக்கிறது.

இக்கண்காட்சியில் சுனாமிக்குப் பின்னர் எமது வலையமைப்பினூடாக இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட வன்னிப் பகுதியில் அகற்றப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருள்கள் அகற்றும் நடவடிக்கைகள், நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வீட்டு மாதிரிகள், சமூக வேலைத்திட்டங்கள் போன்ற ஆவணங்களையும் வெளிப்படுத்துவதாகும்.

**தாங்கள் இதனை ஆதரவுடன் பார்வையிடுவதை சொலிடார் பாராட்டி நிற்கிறது.**

**காலம்: 2006 ஜனவரி 16ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை**
நேரம்: காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 4.30 வரை
இடம்: திட்ட அமுலாக்கல் ஒருங்கிணைப்புச் செயலகம், மருதங்கேணி

(சி/47354) (24-11-45)

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Norwegian People's Aid
ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.
Swiss Labour Assistance SAH


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Fundamental of IT (O/L Students)
Diploma in MS Office
Diploma in Internet & E-mail
Diploma in Desktop Publishing
Diploma in Computer Hardware
Diploma in Computer Programming
**(JAV, V.B.NET, PASCAL)**
Diploma in Accounting Pacages
Grade - 10 ICT (Tamil Medium)
Children Program

Start on: 16.01.2006

மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

(சி/47364)

**C.B. Computer Academy**
Station Road, Kondavil T.P.: 021 4590291

## COMPUTER EXPRESS
### Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் மூன்று நாள் முழுநேர பயிற்சி நெறி

## Mobile Phone Repairing Course

*Course Condense:-*

- Mobile Phone spares (Mobial Phone இல் காணப்படும் பாகங்கள்)
- Type of I.C (Phone ல் காணப்படும் I.C க்கள்)
- Spares பழுதினால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- I.C கள் பழுதடைந்தால் Phone ல் ஏற்படும் பழுதுகள்
- பொதுவாக Phoneல் ஏற்படும் பழுதுகளும் அதற்கான காரணங்களும்
- பழுதுகளும் சோதனை வரிசைகளும்.
- நேரடியாக சில I.C க்களை மாற்றுவதன் மூலம் பழுதுகளை கண்டறியும் சில வழிமுறைகள்.
- ஒரு phone ல் இருந்து இன்னொரு Phone இற்கு மாற்றக்கூடிய I.C வகைகள்.
- Power amp I.C ல் தான் பிழை உள்ளதென கண்டறிய சில வழிமுறைகள்.
- Software fault, software codes.

**Hard Ware பயிற்சி**

- Battery இல் voltage அளவிடும் முறை Battery நல்ல நிலையில் உள்ளதா என அறியும் முறை. அத்துடன் Charge ஏறாத Battery ஐ எவ்வாறு மீண்டும் Charge ஏற்றிப்பயன்படுத்துவது பற்றிய பயிற்சி.
- Phone service செய்யும் பயிற்சி.
- Resistors, Transistors, Capacitors போன்ற பொருட்கள் board இல் இருந்து கழட்டி மாற்றுவது பற்றிய பயிற்சி நெறி.
- Charge pin, Battery pin, Sim connector, switch, display போன்றவற்றை கழட்டி மாற்றுவதுபற்றிய பயிற்சி.
- புதிய L.E.D மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி.
- IC களை கழட்டுவது எவ்வாறு மீண்டும் புதிய IC க்களை பொருத்துவது எவ்வாறு என்பது பற்றிய பயிற்சிகள்.
- Phone இல் Charge ஏறாவிடின் Phone இல் எவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்வது பற்றிய பயிற்சிநெறி.
- Hot Gun பயன்படுத்துவது எவ்வாறு என்ற பயிற்சி.

**Software பயிற்சிகள்**

- Lock உடைப்பது என்பது பற்றிய விரிவான விளக்கம் அத்துடன் பயிற்சி.
- ஒரு Phone இல் உள்ள file ஐ எடுத்து புதிய File மாற்றுவது எவ்வாறு என்ற பயிற்சி (Flash பண்ணும் முறை)

வகுப்புக்கள் ஆரம்பம் 20/01/2006

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் 1,572 மீனவக் குடும்பங்கள் நிர்க்கதியில்; அவர்கள் மீளத் தொழிலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்க!

## யாழ். அரச அதிபரிடம் கடற்றொழிலாளர் சமாசம் அவசர வேண்டுகோள்

குருநகர்,ஜன.16

வடமராட்சி வடக்கு மற்றும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச கடற்றொழிலாளர்களைக் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் கடற்றொழிலுக்குச் செல்லவேண்டாம் எனக் கடற்படையினர் தடுத்துள்ளதால் தொழில் வாய்ப்பை இழந்து செய்வதறியாது தவித்துநிற்கும் இத்தொழிலாளர்களைத் தத்தமது கடற்பிரதேசங்களில் தொடர்ந்து தொழில் செய்து தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த வழிவகுத்துக் கொடுக்கவேண்டும் என யாழ். அரச அதிபர் க.கணேஸிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்ணம் கோரியுள்ளார். இம்மகஜரில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த டிசெம்பர் 27ஆம் திகதியிலிருந்து யாழ். மாவட்டத்தின் வடமராட்சி வடக்கு சமாசத்தின் தொண்டைமானாறு, கெருடாவில், ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களையும் வலி.தென்மேற்கு சமாசத்தின் மாதகல், போயிட்டி, மாரீசன்கூடல், சீந்திப்பந்தல், ஊறணி, சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களையும் கடற்றொழிலுக்குச் செல்லவேண்டாமெனக் கடற்படையினர் தடுத்துள்ளார்கள். அப்பிரதேசங்களிலிருக்கும் படகுகள், கட்டுமரங்கள், இயந்திரங்கள், வலை உபகரணங்கள் முதலியவற்றை உடனடியாக அப்புறப்படுத்துமாறு பணித்துள்ளார்கள்.

வலி.தென்மேற்குக் கடற்றொழிலாளர் சங்கத்தினுள் உள்ள மாதகல் பகுதியில் 370 குடும்பங்களும் சீந்திப்பந்தல், ஊறணி, சேந்தாங்குளம் ஆகிய இடங்களில் சுமார் 212 குடும்பங்களும் வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் சங்கத்தினுள் அமைந்துள்ள கெருடாவிலில் 70 குடும்பங்களும் தொண்டைமானாறு பகுதியில் சமார் 160 குடும்பங்களும் ஆதிகோயிலடிப் பகுதியில் சுமார் 410 குடும்பங்களும் வல்வெட்டித்துறைப் பகுதியில் சுமார் 350 குடும்பங்களுமாக மொத்தம் ஆயிரத்து 572 குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ளன.


மேலும் இம்மீனவர்களின் படகுகள் 560 உம், கட்டுமரங்கள் 230 உம் எதுவித பயன்பாடும் இன்றி உள்ளன. இதனால் இக்குடும்பங்களின் வறுமைநிலையை நீக்க இப்பகுதி மீனவர்கள் தொடர்ந்து தொழில்செய்ய அனுமதியைப் பெற்றுத்தரவேண்டும் - இப்படி யாழ். அரச அதிபரை அவர் கோரியுள்ளார். (3-51)

## மாசிவனில் அடிக்க ஏற்படும் மின்தடை

கோப்பாய்,ஜன.16

நீர்வேலி, குறுக்கு வீதி, மாசிவன் பகுதிகளில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இரவு வேளைகளில் மின்தடையேற்பட்டு வருவதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இரவு வேளைகளில் ஏற்படும் மின்தடை மறுநாள் நண்பகலளவிலேயே சீர் செய்யப்படுவதாகவும் - கூறப்பட்டது. (எ-72)




# உரம் பெற விவசாயிகளுக்கு ஆர்வம் இல்லை கமநல சேவை நிலையங்களில் அது தேக்கம்!

## காலம் பிந்திய விநியோகத்தால் இந்தநிலை

வலி.மேற்கு,ஜன.16

யாழ். குடாநாட்டில் தற்போது மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்ற உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் மத்தியில் ஆர்வம் இல்லை. இதனால் சில கமநல சேவை நிலையங்களில் உரம் தேங்கிக் கிடக்கின்றது.

கமநல சேவை நிலையங்கள் மூலம் தற்போது மானியவிலையில் நெல்லுக்குத் தேவையான ரி.டி.எம். உரம் விநியோகிக்கப்படுகின்றது.

நெல்விதைத்து 70 நாள்களுக்குள் பாவிக்க வேண்டிய இந்த உரத்தைத் தற்போது விநியோகிப்பதில் பயன் இல்லை எனப் பெரும்பாலான விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனாலேயே தாம் இந்த உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம்காட்டவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் சுமார் 7ஆயிரம் கெக்ரர் வயல் நிலப்பரப்புக்கு மானிய விலையில் உரம் விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-175)

# யாழ். மாநகரசபை பிரதேசத்தில் 28 திட்டங்களுக்கு முன்னுரிமை

## மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.16


யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வாண்டு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்துவதற்கு 28 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன என யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அத்திட்டங்கள் தொடர்பான விவரங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

அவை வருமாறு:-

* நீர் விநியோகத் திட்டம், * வீதிகள் வலையமைப்பு, * கழிவு நீர் அகற்றல், வாய்க்கால் மற்றும் வடிகாலமைப்பு, * திண்மக்கழிவு அகற்றல் முகாமை, * கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் சேகரிப்பு உபகரணங்கள் வழங்கல், * மாநகர சபை அலுவலகக் கட்டடத் தொகுதி, * கலாசார மண்டபம் (திறந்த வெளி அரங்கிற்குப் பதிலாக), * புல்லுக்குளம் மற்றும் ஆரியகுளம் அபிவிருத்தி, * கன்னாதிட்டிக்குளம், வட்டக்குளம், பாசையூர் குளம் அபிவிருத்தி, * மினிபஸ் நிலைய மாற்றம், நடைபாதை வியாபாரிகள் சந்தை, * விளையாட்டரங்கு அபிவிருத்தி, * நவீன சந்தை - தீந்தை பூசுதல் மற்றும் மூன்றாம் கட்டக் கட்டட அமைப்பு, * சின்னக்கடைச் சந்தை - மாடிப்படி அமைத்தல், * செங்குந்தாச் சந்தை கடைக் கட்டடத் தொகுதியும் மரக்கறிச் சந்தை மற்றும் மீன்சந்தை, இறைச்சிக் கடை அமைப்பும்.

* தீயணைப்புச் சேவை - மேலதிக இயந்திரம், * வண்ணான்குளப் பகுதி அபிவிருத்தி, * வீதி விளக்குகள், * ஜூபிலி மகப்பேற்று மனை புனரமைப்பு, * நிர்வாகக் கணனி மயப்படுத்தல், * சுப்பிரமணியம் பூங்கா, கிட்டு பூங்கா புனரமைப்பு * குருநகர், திருநகர், நாவாந்துறை சூரியவெளி, பொம்மைவெளிப் பகுதிகளில் உள்ள நெருக்கமான குடியிருப்பு, தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்தல், * வாவியோர நில மீட்பு * பொது நூலகத்துக்குத் தீந்தை பூசுதல் * பொதுநூலக உணவுச் சாலை திறத்தல், எரிந்த நூலகத்தின் மாதிரியை உருவாக்குதல் * மணிக்கூண்டுக் கோபுர புனரமைப்பு * நகர நல்லாட்சி எண்ணக்கரு பரப்புரை, * ஐ.நா. வதிவிட நிறுவனத்தின் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் - 10.(3-8-7)



சங்கானைப் பிரதேச சபை உப அலுவலகத்தில் சித்த ஆயுள்வேத மருந்தகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தகத்தைப் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். இந்த மருந்தக வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் சொரூபி அருகில் காணப்படுகின்றார். (3)

# பாடசாலைகளில் சிறுவர் நாடகங்கள்; செயல்திறன் அரங்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.16

பல பாடசாலைகளின் வேண்டுகோளுக்கு இணங்க செயல்திறன் அரங்க இயக்கத்தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'கண்மணிக்குட்டியார்' சிறுவர் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளைச் செயல்திறன் அரங்க இயக்கம் முன்னெடுத்து வருகின்றது. சிறுவர் அரங்கிற்கான நாடகங்களான பஞ்சவர்ண நரியார், பந்தயக் குதிரையார், மந்திரத்தால் மழை போன்ற நாடகங்களை இந்த நிறுவனமானது யாழ். மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளிலும் கொழும்பு உட்பட வெளிமாட்ட பிரதேசங்களிலும் மேடையேற்றிவருகின்றது.

இதேபோன்று கண்மணிக்குட்டியார் சிறுவர் நாடகமானது யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுவர் பாடசாலைகளில் இம்மாத இறுதிக்குள் மேடையேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுவர் நாடகமானது ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பாடசாலைகளில் மேடையேற்ற விரும்பும் ஆசிரியர்கள் மேடையேற்ற அனுமதிகளை அருளகம், ஆடியபாதம் வீதி, திரு, நெல்வேலியில் இயங்குகின்ற செயல்திறன் அரசங்க இயக்கத்துடன் தொடர்புகொண்டு மேற்கொள்ளமுடியும். (3)

# மஞ்சவனப்பதி முருகன் மீதான பாடல் இறுவட்டும் நூலும் வெளியீடு

வலி.வடக்கு,ஜன.16

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் புகழ்பாடும் நூல் ஒலிநாடா மற்றும் இறுவட்டுக்கள் பொங்கலன்று வெளியிட்டுவைக்கப்பட்டன.

மஞ்சவனப்பதிமுருகன் ஆலய வெளி மண்டபத்தில் சைவப்புலவரும் ஓய்வுபெற்ற அதிபருமான திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இந்தநிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மற்றும் செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரையை ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ விக்கினேஸ்வரக்குருக்களும் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்தினர்.

வரவேற்புரையை க.காண்டீபனும் வெளியீட்டுரையை கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேரசிரியர் கலாநிதி க.கோபால கிருஷ்ணனும் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து இறுவட்டை பேராசிரியர் வெளியிட்டு வைக்க விக்கினேஸ்வரக் குருக்கள் பெற்றுக்கொண்டார்.

ஒலிப்பதிவு நாடாவை திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நூலினை ந.விஜயசுந்தரமும் வெளியிட்டு வைத்தனர்.(3-86-111)



· கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தின் புகழ்பாடும் 'மஞ்சவனப் பதியினிலே' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் சைவப் புலவர், ந.திருஞானசம்பந்தபிள்ளை தலைமை உரையாற்றுவதையும் பேராசிரியர் கோபாலகிருஷ்ணசர்மா நூலை வெளியிட்டு வைப்பதையும் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# சோமாஸ்கந்தவின் கால்கோள் விழா

கோப்பாய்,ஜன.16

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் தரம் ஒன்றுக்குப் புதிதாக அனுமதிபெற்ற மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் ச. சுந்தரரேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-72)

# புகையிலைச் செய்கையாளர் பதிப்பு

கோப்பாய்,ஜன.16

கடந்த வாரம் பெய்த மழையினால் கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் நடுகை செய்யப்பட்ட புகையிலை நாற்றுக்கள் பெருமளவில் பழுதடைந்து பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது புதிய நாற்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ள போதிலும் அவை உரி வளர்ச்சியை அடையும் முன்னர் மழை தொடர்ந்து பெய்யுமெனின் புகையிலைச் செய்கையைக் கைவிடவேண்டியேற்படலாம் என்று விவசாயி ஒருவர் தெரிவித்தார். (எ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடமைப்புத் திட்ட பயனாளிகளைத் தெரிவு செய்ய தென்மராட்சியில் புதிய நடைமுறை என அறிவிப்பு

தென்மராட்சி, ஜன.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கயின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட பயனாளிகளைத்தெரிவு செய்வதற்கு பிரதேச செயலக திட்டமிடற்பிரிவினர் புதிய நடைமுறைகளைப் பின்பற்றவுள்ளனர்

வீடமைப்புத் திட்டத்திற்கென பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூலம் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டு தகுதியான குடும்பங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

தெரிவு செய்யப்படும் குடும்பங்களின் வீடு பற்றிய நிலைமைகள் பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் பார்வையிடப்பட்டு படிவங்களில் பதிவு செய்யப்படும். பின்னர் கணனி இயந்திரங்கள் மூலம் தகதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1924 . 10 . 28

மறைவு 2004 . 01 . 16

### அமரர் லில்லிகிறேஸ் தேவசகாயம்

அம்மா என்றால் அன்பு
அன்பு என்றால் அம்மா
அன்பால் எம்மை ஆண்டவளே!
அன்பால் எவ்வளவோ சாதித்தவளே (கொரிநியர்-1)

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது
அன்பு அழுக்காறு கொள்ளாது
வெறுமை பேசாது; இறுமாப்பு அடையாது
இழிவானதைச் செய்யாது தன்னலத்தை தேடாது
சீற்றத்துக்கு இடம் தராது, வர்மம் வைக்காது
அநீதியைக் கண்டு மகிழ்வுறாது
உண்மை கண்டு உளம் மகிழும்
அனைத்தையும் தாங்கிக்கொள்ளும்
எல்லாவற்றிலும் தலை சிறந்தது அன்பே
அன்பை நம் உள்ளங்களில்
நிறைவாகக் கொண்டு நம்மையும்
உலகையும் அமைதிகாக்க அர்ப்பணிப்புடன்
வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்.

28, நக்காலேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (45238)

கணவர்,
பிள்ளைகள்.

## வறிய குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்

குருநகர், ஜன.16

யாழ். சமுர்த்தி மகாசங்கத்தால் யாழ். பிரதேச செயலகப்பிரிவில் வசிக்கும் நூறு வறிய குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன. யாழ். பிரதேச செயலக முகாமைத்துவப்பணிப்பாளர் ம.கியுமன் தெரிவித்துள்ளார் இந்த நுளம்பு வலைகள் கடந்த 6ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ். பிரதேச செயலகத்தில் உள்ள யாழ். சமுர்த்தி மகாசங்கத்தில் வைத்து வழங்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-51-190)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களுக்கு பொலீஸார் சமுகமளிப்பதில்லை

வலி.மேற்கு, ஜன.16

குடாநாட்டில் நிலவும் அசாதாரண நிலைமைகளை அடுத்து பிரதேச செயலகங்களில் மாதாந்தம் நடைபெறும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களுக்கு பொலீஸார் கலந்து கொள்வதில்லை என்று கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் மாதாந்தம் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெறுவதும் அதில்சகல திணைக்களத் தலைவர்களும், பொலீஸாரும் கலந்து கொள்வது தெரிந்ததே.

இவ்வாறு மேற்படி கூட்டங்களில் கலந்து கொள்ளும் பொலீஸார் பிரதேச பாதுகாப்பு மற்றும் மக்கள் பிரச்சினை தொடர்பாக பிரதேச மட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதும் குறிப்பிடத்தக்கது. (எ-175)

## உப உணவுச் செய்கையாளருக்கு வலி.மேற்கில் உதவிகிடைக்கும்

வலி.மேற்கு ஜன.16

கெயர் நிறுவனத்தினர் அராலி, மூளாய் பகுதிகளில் உப உணவுப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு உதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பெரும்போக நெற்செய்கைக்கு பின்னர் அராலி, மூளாய் ஆகிய இடங்களில் எள்ளுச் செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கான உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது என்று கெயர் நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(எ-175)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 05 . 1986

மறைவு 15 . 01 . 2005

### அமரர் ஜெயக்குமாரன் தனுஷன்

ஆண்டொன்று ஆனதையா அவனியில் நீமறைந்து
உம் உயிர் பிரிந்தாலும் நின்நினைவு எம்மைவிட்டுப் பிரியாது
எம் அருகிலே இருக்கின்றாய்
உன்னை எண்ணியே உன் அக்கா, அண்ணா, அம்மா
வாழ்கின்றார்கள் தனுஷனே! துடிதுடிக்கவைத்தாய்
உன்னை இனி எப்போ காண்போம்
ஒரு முறை வந்து திருமுகம் காட்டுவாயா?
கயவர் இல்லா உலகில் மீண்டும் ஒரு கொடியிலே பூக்களாய் மலர
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழனியாண்டவர் வீதி,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு. (45345)

உம்பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்.

## முதலாம் வருட நினைவலைகள்



உதிப்பு 02 . 02 . 1923

உதிர்வு 27 . 01 . 2005

### அமரர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(மூத்தப்பா மணியம்)

வந்த கடன் முடிந்ததென விதி வழி சென்றீரே
பந்தங்களின் பரிதவிப்பை பார்க்க நீ வாராயோ
எந்தப் பிறப்பெடுத்தாலும் உன் நினைவு
சொந்தங்களை விட்டுப் பிரிந்திடுமோ...

எ ,வன்
கொடிகாமம். (C/47301)

ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.


## புதிய பிரிவுகள் ஆரம்பம் : 21.01.2006

### Master of Business Administration (MBA)



Available - Accessible - Affordable personalized education

Sikkim Manipal University

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.

Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

M B A

Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

Eligibility: Degree or equivalent profe-ssional qualifica-tion. Work experience will be an added advantages

Duration: 2 years (Part time)

| FIRST SEMESTER | SECOND SEMESTER |
|---|---|
| Management process and organization behavior<br>Internet Application<br>Marketing Management<br>Human Resource Management<br>Operation Management<br>Financial Management<br>Management Information System | Strategic Technology Management<br>Management of Technology transfer, -absorption & IPR<br>Business Process, Re-Engineering<br>Enterprise Resource Planning<br>E-customer Relationship Management & -Supply Chain Management<br>Conflict Management & Negotiation Skills<br>History of Management, Case studies |

| THIRD SEMESTER | FOURTH SEMESTER |
|---|---|
| Infrastructure Management<br>Fundamentals of Infrastructure Project Finance<br>Infrastructure Development & Policy Planning<br>Project Management<br>Decision Support System | Electives *<br>Project<br>* HRD + MKT / Finance + MKT / System + MKT |

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No. : 021 222 8060 / 021 222 2204



## ஆயுர் வேத மருந்துகள் மூலம் நாங்கள் சிகிச்சைஅளிக்கிறோம்




பக்க விளைவுகள் இல்லை உள் விளைவுகள் இல்லை

இலவச ஆலோசனைகளுக்கு...

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company
Level 5/East Tower/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 0094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
E-mail : fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.org - AVAILABLE ON LINE

தொடர்புகளுக்கு கிழமை நாட்களில் திறக்கும் நேரம் காலை 9.00மணி முதல்-மாலை 5.00மணி வரை சனிக்கிழமைகளில் காலை-9.00மணி முதல்-மாலை 2.00மணி வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற இராணுவக் கெடுபிடிகளால் இங்கிருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப் பரப்பில் தஞ்சமடையும் மக்கள் கண்டாவளை, புளியம்பொக்கணைச் சந்தியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பதிவகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்வதைப் படங்களில் காண

## அறநூல்களின் மனனப் போட்டிகள்

புதுக்குடியிருப்பு,ஜன.16

முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச் சங்கம் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் மனனப்போட்டிகளை நடத்தவுள்ளது.

முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயக் கல்விப் பணிமனைகளின் அனுசரணையுடன் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனவும் இதற்கென பாடசாலைகளுக்கு இலவசமாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் போன்ற நூல்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இன்றைய தலைமுறையினரிடையே இவை தொடர்பான அறிவின்மை காணப்படுகின்றமையாலும் அறநெறி, ஒழுக்கசீலப் பண்புகளை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று தமிழ்ச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (த-353-203)

## கிளிநொச்சிக்குப் புதிய கூட்டுறவு ஆணையாளர்

கிளிநொச்சி,ஜன.16

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சோ.குமாரவேலு கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர், தற்போது பதவி உயர்வு பெற்று கிளிநொச்சிக்கு நியமனம் பெற்றுள்ளார்.

(த-75)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

புதுக்குடியிருப்பு,ஜன.16

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முல்லைத்தீவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

புதுக்குடியிருப்பில் 'அன்பு குடியிருப்பு', 'நேசன் குடியிருப்பு', 'லோறன்ஸ் குடியிருப்பு' ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்களுக்குப் பொருள்கள் வழங்கியுள்ளனர். அரிசி, பருப்பு, சீனி, சவர்க்காரம், தேயிலை, மீன் ரின், நுளம்புத் திரி, சமையல் எண்ணெய் போன்ற பொருள்கள் கடந்த 10ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் அன்பு குடியிருப்பு முன்பள்ளியில் வைத்து வழங்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளை கடந்த மழைகாலத்தில் 120 குடும்பங்களுக்குக் கூரை விரிப்புகளையும் உணவு அல்லாத பொருள்களையும் வழங்கியது. இந்தக் குடியிருப்பில் வாழ்பவர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பிறமாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

இந்தக் குடியிருப்பில் வாழ்பவர்களை அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ கவனிப்பது இல்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் பல கிணறுகளும் பல நூற்றுக்கணக்கான வீடுகளும் இந்தக் குடியிருப்புகளுள் நாசமாகியமை குறிப்பிடத்தக்கது. (த-353)

## அக்கராயனில் தங்கியுள்ளோருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

பரந்தன்,ஜன.16

யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து அக்கராயன் பிரதேசத்தில் வாழும் 100 குடும்பங்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அத்தியாவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் இராணுவக் கெடுபிடிகளால் ஆயிரக்கணக்கான மக்கள் வன்னியை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர். சிலர் உறவினர் வீடுகளிலும் பலர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேச மட்டத்திலான நலன்பேணும் நிலையங்களிலும் பரவலாக வாழ்ந்துவருகின்றனர்.

அக்கராயன் பிரதேசத்தில் வாழ்ந்துவருகின்ற மக்களுள் ஒரு தொகுதியினருக்கு (100 குடும்பங்கள்) கடந்த 9ஆம் திகதி காலை 10.30 மணியளவில் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன வளாகத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உணவல்லாத அத்தியாவசியப் பொருள்களை வழங்கியுள்ளது.

இதேபோன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிளிநொச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி, பூநகரி, முழங்காவில், பளை ஆகிய பிரதேசங்களிலும் தொடர்ச்சியாகப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(த-352)

## கிளி. மத்திய தபாலகத்தில் பணியாற்றியோருக்குப் பரிசளிப்பு

பரந்தன்,ஜன.16

கிளிநொச்சி மத்திய தபாலக நலன்புரிச் சங்கத்தின் பரிசளிப்பு விழாவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் கடந்த வாரம் கிளிநொச்சி மத்திய தபாலகத்தில் நடைபெற்றன.

தபாலதிபர் மா.பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம், ஓய்வுபெற்ற தபாலதிபர் பொ.பஞ்சாட்சரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனை அடுத்து இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

வடமாகாணத்தில் அதிகளவு பரிசில்களைப் பெற்ற தபாலகமாகக் கிளிநொச்சி மாவட்டத் தபாலகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் தரம் 2 தபாலதிபர் பதவியில் இரண்டாவது இடத்தைக் கிளிநொச்சி தபாலதிபர் மா.பேரம்பலம் பெற்றுக்கொண்டார். உபதபாலதிபர் தரத்தில் வட்டக்கச்சி உபதபாலதிபர் திருமதி றோகான் சங்குபாதராணி 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். அஞ்சலர் தரத்தில் கிளிநொச்சி தபாலகத்தைச் சேர்ந்த சி.நடராசா முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர்களுக்கான நினைவுக் கேடயம், பரிசில்கள் என்பவற்றை இந்த நிகழ்வில் வைத்து ஆர்.சிறிக்குமார், வி.மகாலிங்கம், என்.பத்மநாதன், இ.இராசரத்தினம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (த-203-352)



ஜெயபுரம் தென்னிந்தியத் திருச்சபை பாடசாலை ஒளிவிழா நிகழ்வில் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வில் ஒரு காட்சியையே படத்தில் காண்கிறீர்கள். (படம்: முழங்காவில் செய்தியாளர்)

## உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டன

ஒட்டுசுட்டான்,ஜன.16

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனமாகிய முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட வித்தியாபுரம் கிராமத்தில் 50 குடும்பங்களுக்கு 'போரூட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 2 லட்சத்து 2 ஆயிரத்து 536 ரூபா பெறுமதியான உணவல்லாத பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது என நிறுவன இயக்குநர் தெரிவித்தார். (த-34)

## வன்னிச் செய்திகள்

## சிறுவர் இல்லத்திற்கு அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜன.16

கிளிநொச்சி, புதுமுறிப்புக் கிராமத்தில் அமைந்திருக்கும் மகாதேவா ஆச்சிரமம் சைவச்சிறுவர் இல்ல மாணவர்களுக்கு உடுபுடைவைகள் , படுக்கை விரிப்புகள், விளையாட்டு உபகரணங்கள் என்பன அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் செல்வி. கே.சுலோஜினி இல்ல மாணவர்களுக்கான அன்பளிப்புப் பொருள்களை இல்லத்தின் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சுந்தரராஜனிடம் கையளித்துள்ளார். (த-203)

## மோசமாகச் சீரழிந்த நிலையில் ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி

புதுக்குடியிருப்பு,ஜன.16

ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதியில் உள்ள மதகுகள் உடைந்துள்ளதுடன் வீதி குண்டும்குழியுமாகக் காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு, ஒட்டுட்டான் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் புளியங்குளம், வவுனியா போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு இந்த வீதியையே பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் இந்த வீதி சேதமடைந்துள்ளமையால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு இவ் வீதியால் பயணம் செய்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங்கேணி செல்லும் இந்த வீதியில் சுமார் 10 கிலோ மீற்றர் நீளமான வீதி பாரிய குண்டும்குழியுமாகக் காணப்படுகின்றது.

எனவே, உரியவர்கள் இந்த விடயத்தில் கவனமெடுத்து மக்களின் அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டுமென்று பொதுமக்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

(த-352-203)

# அங்கீகரிக்கப்படாத நிறமூட்டிகளை உணவுகளில் கலப்பதற்குத் தடை!

### தமிழீழ சுகாதாரப் பிரிவினர் அறிவிப்பு

கிளிநொச்சி,ஜன.16

மனித உடல் நலத்தைப் பாதிக்கும் அங்கீகரிக்கப்படாத நிறமூட்டிகளை உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாகத் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சுகாதாரப் பிரிவினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய நிறமூ_டிகள் உணவுத் தேவைகளுக்காக அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இனிப்பு வகைகள், மென்பான உற்பத்தி, ஐஸ்கிறீம் உற்பத்தி போன்ற பல்வேறு உணவுத் தயாரிப்புகளின்போது இந்த நிறமூட்டிகள் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறு உணவுத் தேவைகளுக்காக நிறமூட்டிகள் பயன்படுத்தப்படுவதால் அவை உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிப்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே உணவுத் தேவைகளுக்கு அங்கீகரிக்கப்படாத - தீங்கு விளைவிக்கக்கூடிய - நிறமூட்டிகள் பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்படுகின்றது.

அத்துடன், அதிகளவிலான உணவு நிறமூட்டிகளைப் பயன்படுத்துவதையும் குறைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(த-203)

# முள்ளியவளை கலைமகள் வித்தியாலய பவள விழா சிறப்புற நடைபெற்றது

புதுக்குடியிருப்பு,ஜன.16

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தின் பவள விழா கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

முள்ளியவளை கலியாண வேலவர் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் நடைபெற்று பிரதம விருந்தினர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பெரும் ஊர்வலமாகப் பாடசாலையைச் சென்றடைந்தனர்.

பிற்பகல் 2.30 மணியளவில் அங்கு விழா ஆரம்பமானது. மங்கள விளக்கினை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ச.ப.அரியரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சிவராசா, முன்னாள் அதிபரும் முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியுமான க.மார்க்கண்டு ஆகியோர் ஏற்றினர்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து பாடசாலைக் கொடியினை அதிபர் வ.நடராசா ஏற்றிவைத்தார்.

சிறப்புரைகளை வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் மாவட்டக் கல்வி அதிகாரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உட்படப் பலர் ஆற்றினர்.

தொடர்ந்து பவளவிழா மலர் வெளியிடப்பட்டது. பரிசளிப்பு வைபவமும் நடைபெற்றது. பரிசில்களை வலயக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடற் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெ…

(த-353)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவர் கலைப்பயில் களம்
**CHILDRENS FINE ARTS TRAINING CENTRE**

செயல்திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சிறுவர்களுக்கான நுண்கலைப் பயிற்சிக் களம் ஒன்றை ஆரம்பித்து இயக்கி வருகின்றது.

இப் பயில் களத்தில் தமது கலையாற்றலை மேம்படுத்த விரும்பும் சிறுவர்கள் பங்கு கொண்டு பயிற்சிகளைப் பெறலாம். வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றக் கூடியதாகப் பயிற்சிகள் வழங்கப்படும்.



*பயிற்சிகளின் விவரம்*

1. நாடகம் 4. வாய்ப்பாட்டு
2. மிருதங்கம் 5. பரம்பரிய கூத்துக்கள்
3. நடனம் 6. வயலின்

பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் 30.01.2006 இற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ளலாம். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் (மாலை நேரம்) வகுப்புகள் நடைபெறும்.

பயிற்சிகள் நடைபெறும் இடம்/தொடர் முகவரி

**செயல்திறன் அரங்க இயக்கம்**
**ACTIVE THEATRE MOVEMENT**
அருளகம், ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. (சி-47360) (54-11)

## நாடக அரங்கியல் மாணவர்களுக்கு
*செயல் முறைப் பயிற்சிகள்*
*PRACTICAL TRAINING FOR THE STUDENTS OF DRAMA & THEATRE*

செயல் திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தை மாதம தொடக்கம் அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்து இயங்கி வருகின்றது. இவ் வள நிலையத்தில் O/L, A/L மாணவர்களுக் கான நாடக அரங்க பயிற்சிகள் (செயல்முறை பாடத் திட்டத்திற்கு அமைவாக) ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சியில் பங்கு பற்ற விரும்புவர்கள் தங்கள் பெயர்களை 30.01.2006 இற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் (மாலை நேரம்) வகுப்புகள் நடைபெறும். (விண்ணப்பங்கள் மட்டுப் படுத்தப்பட்டது)

பயிற்சி நடைபெறும் இடம்,தொடர் முகவரி
**செயல்திறன் அரங்க இயக்கம்**
**ACTIVE THEATRE MOVEMENT**
அருளகம், ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. (சி-47359) (54-11)

## பதவி வெற்றிடங்கள்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்தும் உளசமூக மற்றும் நாடக அரங்கச் செயற்திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நாடகத்துறைப் பயிற்றுவிப்பாளர் (ஒருவர்)
சங்கீதம்/நடனம்/நாடகம் ஆகியதுறைகளில் பட்டம் பெற்றிருத்தல்/வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் 5ஆம், 6ஆம் தர பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் அத்துடன் நாடகத்துறை அனுபவம்..
கொடுப்பனவு ரூபா 10000/-


2. போதனாசிரியர் (ஒருவர்)
வட இலங்கை சங்கீதசபையினால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் நாடகத்தில் சித்தியடைந்திருத்தல.
கொடுப்பனவு ரூபா 8000/-

விண்ணப்ப முடிவு திகதி: 25.01.2006
விண்ணப்ப முகவரி:

**செயல்திறன் அரங்க இயக்கம்**
**ACTIVE THEATRE MOVEMENT** (சி-47358) (54-11)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 26 - 07 - 1930 விண்ணில் 15 - 12 - 2005



கடந்த 15-12-2005 வியாழக்கிழமை அன்று எங்களை விட்டுப்பிரிந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் செல்லன் பொன்னுத்துரை**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16-01-2006) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அல்லின் வீதி, (பெருநெற்தாழ்வு), காரைநகர். (45364) (54-11)
பிரிவால் துயருறும்:- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# சுழிபுரம் பகுதி மீனவர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

வலி.மேற்கு,ஜன.16

சுழிபுரம் கடற்றொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்காகச் செல்வதற்கு பலகட்டுப் பாடுகளைக் கடற்படையினர் விதித்துள்ள னர். இதனால் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம், காட்டுப்புலம் ஆகிய இடங் களைச் சேர்ந்த மீனவர்கள் மாலை 5.30 மணிக்கு முன்னர் கடலுக்குள் செல்ல வேண்டும் என்றும் அடுத்த நாள் காலையே திரும்பிவர முடியும் என்றும் புதிய நிபந்த னையை சுழிபுரம் கடற்கரையில் நிலை கொண்டுள்ள கடற் படையினர் விதித் துள்ளனர்.

இதனால், நள்ளிரவு நேரத்தில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் தற்போது பகலிலேயே செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் தங்கியிருப்பதற்கு தங்குமிடம் எதுவும் இல்லாமையினால், மாலை நேரத் தில் செல்லும் மீனவர்கள் அடுத்தநாள் காலை வரை தமது படகுகளிலேயே தங்கியிருந்து மீன் பிடிக் கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

(3-175)

## 33 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 09-02-1940 இறப்பு 15-12-2005



**அமரர் முத்தன் சிவசம்பு**

கடந்த 15.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.01.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரை யும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு, நீர்வேலி. (45369) (30-54-11) பிள்ளைகள்.

## காரைநகர் தோப்புக்காடு மக்கள் இடம்பெயர்வு

வலி.மேற்கு,ஜன.16

காரைநகர் கடற்படை முகாமுக்கு அண்மை யிலுள்ள தோப்புக்காடு கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

காரைநகர் கடற்படையினர் கடந்த சில நாள்களாக இக்கிராமத்தில் மேற்கொள்ளும் கடும் சோதனை நடவடிக்கைகளினால் மக்கள் அச்சமடைந்து இடம் பெயர்கின்றனர்.

இவர்கள் வன்னிப் பகுதிக்கும் யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேசங்களுக் கும் செல்கின்றனர். தோப்புக்காடு, கிரா மத்தைச்சுற்றி பல காவல் அரண்களை கடற் படையினர் அமைத்துள்ளனர்.

(ஐ-175)

## வீரவணக்கம்
## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

07.10.1982



16.01.2001

**லெப்.சுதாகரி/குறிஞ்சி**
**அரசகுமார் ஜெயசுதா**

*பள்ளிப் பருவமதில் படைக்கலத்தை விரும்பினாய்*
*பகலிரவாய் விழித்திருந்து பணியாற்றினாய்*
*மானிடத்தின் கடமையைக் காணிக்கையாக்கினாய்*
*மறவீரருள் நானுமொருத்தியென நிரூபித்தாய்.*

என்றும் உலராத ஈரவிழிகளுடன் உன் நினைவில் அம்மம்மா கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை குடும்பம், அப்பம்மா அருளா னந்தம் இராசம்மா குடும்பம், திருநாவுக்கரசு மாமா குடும்பம், மகேந் திரன் சித்தப்பா குடும்பம், தருமு மாமா குடும்பம், பெரியப்பா நவரட்ணராஜா குடும்பம் (கனடா), ராசன் சித்தப்பா குடும்பம் (ஜேர்மனி), மோகன் மாமா குடும்பம் (ஜேர்மனி), சந்திரன் சித்தப்பா குடும்பம் (ஜேர்மனி).

இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு. (சி-47318) (54-11) அண்ணன் சுதன்.

## திருவாசகப் போட்டிமுடிவுகள் அறிவிப்பு

மானிப்பாய்,ஜன.16

மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களி டையே நடத்தப்பட்ட திருவாசகப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றோரின் பெயர் விவரங்கள் வருமாறு:

பிரிவு 1: ஜெ.வோஜனா (கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை), உ.மயூரிகா (மானிப்பாய் மெமோரியல் நவோதயா கல்லூரி), அ.பிரியங்கா (உடுவில் மகளிர் கல்லூரி),

பிரிவு11: நா.கார்த்திகா (மானிப்பாய் மெமோரியல் நவோதயா கல்லூரி), சி.கிருத்திகா (உடுவில் மகளிர் கல்லூரி), இ.பிறைனா (உடுவில் மகளிர் கல்லூரி),

பிரிவு 111: நா. தயாழினி (உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), நா.ஸ்ரீ.வள்ளி (இணுவில் இந்துக் கல்லூரி), க.நாகேந்திரம் (நவாலி மகாவித்தியாலயம்).

(ஐ-90-204)

## வயோதிபரின் உறவினர்கள் யார்?

யாழ்ப்பாணம்,ஜன.16

கோண்டாவில் மேற்கு உப்புமடம் சந்திப் பகுதியில் நிலை தடுமாறிய நிலையில் கவனிப்பாரின்றி தனித்துக்காணப்பட்ட வயோதிபர் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சுமார் 70 வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபரை இனங்காண உதவுமாறு உறவினர்களிடம் கோண்டாவில் தெற்கு, மேற்கு கிராம அலுவலர் எஸ். சிறீஸ்கந்தராசா கேட்டிருக்கிறார்.

சிவப்பு நிற ரீ-சேர்ட், சாரம் அணிந்த நிலையில் காணப்பட்ட இந்த வயோதிபர் யாழ் போதனாவைத்தியசாலையில் 9ஆம் வார்ட்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

(ஐ)

## பிற்போடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு ஜனவரி 29 இற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

(45374) பங்குச்சபை.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

*கடந்த 18.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்*



**அமரர் மருதப்பு நல்லையா**


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (17.01.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி யளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை. (45339) (54- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதமான ஓர் இலட்சியவாதியாக வாழ்ந்து போராடிய மாவீரன் கிட்டு

**விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார்) வங்கக் கடலில் வீரச்சாவடைந்து 13 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை ஒட்டி அவர் நினைவாக தேசியத் தலைவர் வே.பிரபாகரன் 1993இல் விடுத்த செய்தி இங்கு மறுபிரசுரமாகின்றது.**



மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்திரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுதான் பூகம்பத்தை மனிதமொழியில் விவரிக்க முடியாது.

எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் இப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன்.

இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது.

ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தால் ஒருவரை ஒருவர் ஆழமாக இனங்கண்டு புரிந்துணர்வில் வேரூன்றி வளர்த்த நேயம் அது.

அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்தில் இருந்தே கண்டுகொண்டேன்.

அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம்இருந்தன. அதனால், அவன் ஓர் அற்புதமான இலட்சிய வாதியாக வாழ்ந்தான்; போராடினான்.

அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்தது. கிட்டு ஒரு தனி மனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தில் பதிவு.



வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

கிட்டு நீ சாகவில்லை. ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## மூளாயில் படைமுகாம் பலப்படுத்தப்படுகிறது

சுழிபுரம், ஜன.16

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைக்கு அருகே பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் முன்பாகச் செல்லும் வீதியில் அமைந்திருக்கும் படைமுகாம் பலப்படுத்தப்பட்டுவருகிறது.

இந்த முகாமில் தரைக்கீழ் அரண்களை அமைக்கும் வேலைகளில் படையினர் சனிக்கிழமை முதல் ஈடுபட்டுவருகின்றனர்.

காவலரண்களின் வேலிகள் புதிய பனை ஓலைகளால் அடைக்கப்பட்டு வருகின்றன. முட்கம்பிச் சுருள்களும் புதிதாக விரிக்கப்படுகின்றன. (ஐ-28)

## அலங்கார உற்சவம்

சுழிபுரம், ஜன.16

சுழிபுரம், கம்பனை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. தினமும் பி.ப. 4 மணிமுதல் அபிஷேக பூசை ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை திருவிழா, சங்காபிஷேகம், அன்னதானத்துடன் நிறைவுபெறும். (ஐ-28)

# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் மூன்று பதவிகளுக்கு ஆள் சேர்க்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.16

அரசமைப்பு அலுவலர்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழுள்ள அரசகரும மொழிகள் ஆணைக்குழு ஆராய்ச்சி உதவியாளர்கள், நிதி உதவியாளர், கூட்டமைப்பு உதவியாளர்கள் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஆராய்ச்சி உதவியாளர்கள் பதவிக்குப் பல்கலைக்கழகம் ஒன்றில் மொழிகள் தொடர்பில் பெற்ற பட்டத்துடன் மும்மொழிகளிலும் அறிவு கொண்டவராகவும், மொழிபெயர்ப்புப்பணி, தகவல் தொழில்நுட்பம், சட்டம், இதழியல், வெகுஜனத் தொடர்பு, வேலைத்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது தொழிற்துறைத் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

நிதி உதவியாளர் பதவிக்குப் பல்கலைக்கழகம் ஒன்றில் வியாபார நிர்வாகம், வர்த்தகம் அல்லது கணக்கியலில் பட்டமும் பட்டயக்கணக்காளார் அடிப்படைப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் மும்மொழிகளிலும் அறிவுபெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டிணைப்பு உதவியாளர் பதவிக்கு பல்கலைக்கழகம் ஒன்றின் மனிதவள முகாமைத்துவம் அல்லது சமூக விஞ்ஞானம் தொடர்பில் பெற்ற பட்டமும் நிர்வாகம், கூட்டிணைப்பு, புலனாய்வு தொடர்பான அனுபவம் பெற்றிருத்தலுடன் மும் மொழி அறிவும் பெற்றிருக்க வேண்டும்.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, நான்காம்தளம் 'பாஷாமந்திரய' இல.341/7, கோட்டே வீதி, இராஜகிரிய "என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# நாடக அரங்கப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஜன.16

நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களது நன்மை கருதி செயல்திறன் அரங்க இயக்கம் அரங்கவள நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இப் பயிற்சிவள நிலையத்தில் நாடக அரங்கப் பயிற்சிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சியானது ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி, உயர்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி என இரு பிரிவுகளாக நடைபெற வுள்ளது.

சாதாரணதர மாணவர்களுக் கான நாடக அரங்கப் பயிற்சியைத் தொடர விரும்புபவர்கள் க.பொ.த. சாதாரணதரத்தில் நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுதல் வேண்டும். இதே போன்று க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சியைத் தொடர விரும்புபவர்கள் உயர்தரத்தில் நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுதல் வேண்டும். இரு பயிற்சிகளும் பாடத்திட்டத்தின் செயல்முறைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையும்.

பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் கிழமை நாள்களில் மாலை நேரத்திலும் 'அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில்' அமைந்துள்ள செயல்திறன் அரங்க அலுவலகத்தில் நடைபெறும். பயிற்சி பெற விரும்புபவர்கள் 30.01.2006 இற்கு முன் செயல்திறன் அரங்க இயக்க நிறுவன அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அல்கெய்டாவின் முக்கிய தளபதி அஸ்மான் சவாரி உயிரிழந்தார்?

இஸ்லாமாபாத், ஜன.16

அல்-கெய்டா தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தளபதிகளில் ஒருவரும் ஒஸாமா பின் லேடனின் நெருங்கிய சகாவுமான அஸ்மான் அல் சவாஹிரி கொல்லப்பட்டுவிட்டார் என்று அமெரிக்க பாகிஸ்தானிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆப்கானிஸ்தான் எல்லை அருகே அமெரிக்க இராணுவ விமானங்கள் நடத்திய தாக்குதலில் அவர் உயிரிழந்தார் என்று அவர்கள் தெரிவித்தனர் எனினும் இந்தத் தகவல் இன்னமும் உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

அல்-கெய்டா அமைப்பும் இது குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

அல்-கெய்டா நடத்தியுள்ள எல்லாவித தாக்குதல்களுக்கும் அல்-சாவாஹிரியே சூத்திரதாரியாக இருந்துள்ளார் என்று நம்பப்படுன்றது. இவர் ஒரு கண் வைத்தியர். எகிப்திய இஸ்லாமிய ஜிஹாத் தீவிரவாத குழுவை இவரே உருவாக்கியிருந்தார். ஒஸாமா பின் லேடனின் வலது கை ஆள் என்று வர்ணிக்கப்படுபவர். அல்-கெய்டா வின் பிரதான கொள்கை வகுப்பாளரும் இவரே.

2001ஆம் ஆண்டு செப்ரெப்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கர வாதத் தாக்குதலின் 'செயப்பாட்டு மூளை' எனவும் இவர் கருதப்பட்டார்.





சவாஹிரியும் ஒஸாமா பின்லேடனும்...

அமெரிக்காவால் 2001ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மிக அவசரமாகத் தேடப்படும் 22 நபர்கள் அடங்கிய பட்டியலில் இவரது பெயர் பின் லேடனுக்கு அடுத்த படி 2ஆவது ஆளாக இடம்பெற்றி ருந்தது. இவரது தலைக்கு 25 லட்சம் டொலர் சன்மான மாக வழங்கப்படும் என்றும் அமெரிக்கா அறிவிக்கிங்கக.

வட அமெரிக்காவுக்கு அல்லது மத்திய கிழக்கிற்கு அவர் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பல வட்டாரங்களில் நம்பப்பட்டாலும் அவர் இன்னமும் ஆப்-பாகிஸ்தான் எல்லையில் ஒளித்துக்கொண்டிருப்பதாகவே அமெரிக்க அதிகாரிகள் நம்புகிறார்கள். (ஐ-ப)

## ரஷ்யாவில் ரயில் - பஸ் விபத்து: 17 பேர் மரணம்!

மொஸ்கோ, ஜன.16

ரஷ்யாவில் ரயில் மீது பஸ் மோதியதில் பள்ளி மாணவர்கள் 17 பேர் இறந்தனர். 5 பேர் காயம் அடைந்தனர். இந்தத் தகவலை அரசின் 'டாஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கிராஸ்நோடர் மாகாணத்தில் வெள்ளிக்கிழமை இந்த விபத்து நடந்தது. மாணவர்களை ஏற்றிவந்த அந்த பஸ், வாரநேஷ்கயா ரயில் நிலையம் அருகே உள்ள கடவையைக் கடக்க முற்பட்டது. அப்போது அந்த வழியாக வந்த ரயில் மீது பஸ் மோதியது. (ஐ)

## மன்னரின் மகன் விபத்தில் மரணம்

மனாமா, ஜன.16

பஹ்ரைன் மன்னரின் 15 வயதான மகன் இளவரசர் பைசல் வீதி விபத்தில் உயிரிழந்தார்.

வீதியில் அவர் ஓட்டிச் சென்ற கார், அவரது கட்டுப்பாட்டை இழந்து போக்குவரத்துச் சிக்னல் கம்பம் மீதும், விளம்பர தட்டி மீதும் மோதியது. இதில் அவர் இறந்தார். இத்தகவலை அரசு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

மன்னர் ஷேக் ஹமாத் பின் இஸா அல் காலிஃபாவின் 6ஆவது மகன் பைசல். (ஐ)

உலக அரங்கில்

# அமெரிக்க வான்தாக்குதலுக்கு பாகிஸ்தான் கடும் கண்டனம்

இஸ்லாமபாத், ஜன.16

ஆப்கானிஸ்தானுடனான பாகிஸ்தானின் எல்லைக்கு அருகே உள்ள கிராமம் ஒன்றில் அல்கெய்டா அமைப்பின் துணைத்தலைவரான அய்மன் அல் ஷவாஹிரி அவர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாகக் கூறப்படும் வான் தாக்குதலை பாகிஸ்தான் கண்டித்துள்ளது.

18 பேர் கொல்லப்படக் காரணமான இந்தத் தாக்குதல் குறித்து தமது கண்டனத்தை அமெரிக்காவுக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக வெளியுறவு அமைச்சுடன் பேசவருமாறு அமெரிக்கத் தூதுவரை பாகிஸ்தான் அழைத்துள்ளது.

இந்தக் கிராமத்துக்கு ஷவாஹிரி அவர்கள் விஜயம் செய்ததாக நம்பப்பட்டதை அடுத்து அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.அமைப்பே இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்டதாக அமெரிக்க ஊடகச் செய்திகள் கூறின.

அல்கெய்டா அமைப்பின் தலைவரை இலக்கு வைக்க[...]தை அமெரிக்காவோ அல்லது பாகிஸ்தானோ உறுதி செய்யவில்லை.

இந்தத் தாக்குத[...] கொல்லப்பட்டதாக கிராமவாசிகள் கூறினார்கள். (ஐ)

# அணு நிலையச் சோதனைக்கு இனி உடன்பட மாட்டோம்!

தெஹ்ரான், ஜன.16

யுரேனியத்தைச் செறிவூட்டுவது என்ற தங்கள் முடிவை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் பரிசீலனைக்குக் கொண்டு செல்வதாக இருந்தால் சர்வதேச அணுவிசை ஏஜென்சியுடன் இனி ஒத்துழைக்க மாட்டோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானிய அரசின் இந்த எச்சரிக்கையை வெளியுறவு அமைச்சர் மனோசெர் மோட்டகி தெஹ்ரானில் வெள்ளிக்கிழமை வெளியிட்டார்.

அணுகுண்டு தயாரிக்க மூலப்பொருளாகப் பயன்படும் யுரேனியத்தைச் செறிவூட்டும் பணியைத் தொடர்வது என்று ஈரான் முடிவு செய்துள்ளது. இதனால் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். அதன் அணு சக்தி நிலையங்களை சர்வதேச அணுவிசை ஏஜென்சியின் ஆய்வுக்கு உள்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகள் சில கோரிக்கை விடுத்துள்ளன.

இதனால், ஈரானுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ஈரான் அதிபர் மஹ்மூத் அகமதுநிஜாத் கடந்த டிசெம்பர் மாதம் ஒரு சட்டம் இயற்றினார். ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் விவாதத்துக்குக் கொண்டு சென்றால், சர்வதேச அணுவிசை ஏஜென்சியை ஆய்வு செய்ய இனி அனுமதிக்கக்கூடாது என்பதுதான் அச்சட்டம். அச்சட்டம்தான் இனி அமுல்படுத்தப்படும் என்று வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய வகுப்புகள் ஆரம்பம்

STP
Your Partner in IT Solution

WHOவின் அனுசரணையுடன் எம்மால் நடாத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி காரணமாக பிற்போடப்பட்டிருந்த புதிய வகுப்புகள் அனைத்தும் 15/01/2006 லிருந்து ஆரம்பமாகின்றன.

Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Hardware Technology
IC T

மிகக் குறைந்த கட்டணம்
போதியளவு பயிற்சிகள்
தராதரமிக்க விரிவுரையாளர்கள்
அரச அங்கீகாரமிக்க நிறுவனம்

STP Computer World (Pvt) Limited
73, Palaly Road, Kantharmadam
Jaffna
Sankathanai
Chavakachcheri

சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் சிறுவர்களுக்கான இலவச கணனி நிலையத்திற்கான இரண்டாம் தொகுதி மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளோர் கிராம அபிவிருத்திச் சபையுடன் 25/01/2006ற்கு முன் தொடர்புகொள்ளவும்

Save the Children in Sri Lanka

- இயக்குநர்
STP


# திருநெல்வேலியில் ஒருகோடி ரூபா செலவில் பைக்கற்றில் பால் அடைக்கும் தொழிற்சாலை

## மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நிறுவுகிறது

அச்சுவேலி.ஜன,16

திருநெல்வேலியில் பைக்கற்றில் பால் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஒரு கோடி ரூபா செலவில் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்டது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பயன்பாட்டுக்கென ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடனும் யாழ்.மாவட்ட செயலகத்தின் நிதியுதவியுடனும் இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி தொழிற்சாலையின் நிர்மாணத்துக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவு 65 லட்சம் ரூபாவையும் யாழ். மாவட்ட செயலகம் 30 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தொழிற்சாலையில் பைக்கற்றில் பால் அடைக்கும் செயற்பாடுகள் இந்த வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பைக்கற்றில் பால் அடைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதும் பாவனையாளர்களுக்குத் தேவையான அளவு பைக்கற் பாலை விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் கூறப்பட்டது. (எ-11)

## கரம்பன் பகுதியில் ஆள்களற்ற வீடுகளில் கதவு, ஓடுகள் திருட்டு

ஊர்காவற்றுறை, ஜன.16

ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதியில் ஆள்களற்ற வீடுகளில் கதவுகள், ஓடுகள், மரங்கள் என்பன நாளாந்தம் திருடர்களால் அபகரிக்கப்பட்டுவருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும்-

இவர்கள் பற்றிய விவரங்கள் அப்பகுதி கிராமசேவை அலுவலரின் கவனத்திற்கு பொதுமக்களால் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இனங்காணப்பட்ட நபர்கள் மேற்படி நடவடிக்கைகளில் மட்டுமன்றி களவாக கால்நடைகளைப் பிடித்து இறைச்சி அடித்தல் போன்ற சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபட்டுவருவதாகவும் - கூறப்பட்டது.(எ-16)

## நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு

தோற்றம்
19 - 06 - 1928



மறைவு
16 - 01 - 2004

அமரர்
**பிலிப் பிரான்சிஸ் சேவியர்**
(P.F.XAVIER)

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம் மனதை விட்டு நீங்காது

680, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(45376)(26-11-45)

உம்பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## நெஞ்சகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

மலர்வு
07 - 12 - 1918



உதிர்வு
27 - 01 - 2005

**சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம்**
(Retired Administrative Assistant - C.E.B)

13ஆம் ஆண்டு

மலர்வு
04 - 10 - 1984



உதிர்வு
22 - 09 - 1998

**புவனேஸ்வரி வல்லிபுரம்**

நல்விளக்காய் நம் வாழ்வை ஒளிர்வூட்டி
அன்பைப் பொழிந்து அறிவையூட்டி
பாரினிலே பண்பாய் எமை வளர்த்து
மாய்பொருளாய் மறைந்துபோன தெய்வங்களே!
நெஞ்சினிலே சுமக்கின்றோம் உங்கள் நினைவுகளை.

"பழமுதிர்ச்சோலை",
உப்புக்கிணற்றடி.
திக்கம்.
(45384)(54-26-11-45)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### குணரத்தினம் ஜெயசீலன் (குஞ்சன்)

சிலம்புப்புளியடி, சங்கானையைச் சேர்ந்த குணரத்தினம் ஜெயசீலன் 14-01-2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் வீரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் மகாராணியின் அன்புக் கணவரும் நிதர்சனா(சபி), சுதர்சனா (அபி), குணலக்ஸ்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்கயர்க்கரசி (கனடா), தனசீலன் (லண்டன்), மனோறஞ்சினி, விஜயமாலா, சத்தியசீலன் மற்றும் காலஞ்சென்ற மோகனசீலன் மற்றும் புஸ்பராணி(சுவிஸ்), தர்மசீலன் சிவசாந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினசபாபதி, வசந்தாதேவி மற்றும் காலஞ்சென்ற நாகேந்திரன் மற்றும் மாலினி, கலைச்செல்வி, விஜயகுமார் (சுவிஸ்), சுரேந்திரகுமார் (சுவிஸ்) திருமதி சின்னக்கிளி, திருமதி வில்வராணி, சக்திவடிவேல்(ஜேர்மனி), ஜெயராசசிங்கம் (ஜேர்மனி), மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-01-2006) திங்கட்கிழமை பி.ப.ஒருமணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலம்புப்புளியடி,
சங்கானை.
(45382)(26-11-45)

தகவல்:
குடும்பத்தினர்.


Shanida Vasanawa
1676

14.01.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

06 39 40 64 (04)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300834240 இலிருந்து 300848062

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 90,08,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 90,08,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 350 | 1,000/- | 3,50,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,133 | 500/- | 5,66,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 17,567 | 40/- | 7,02,680/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 16,496 | 20/- | 3,29,920/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,49,395 | 10/- | 24,93,950/- |
| மொத்தம் | | | 65,48,050/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 2,84,969 | | 70,48,050/- |

தொடர் இல. 200896678 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜனவரி 18 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 96,73,750/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முதியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 300843801-8-03 |
| அனுராதபுரம் | 300844081-6-47 |
| இரத்தினபுரி | 300835775-1-00 |
| கேகாலை | 300842309-8-91 |
| திருகோணமலை | 300836683-4-31 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 746 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 13-01-2006 | செல்லுபடியாகும் தொடர் இல. 5928519-5939561 |

வெற்றி இலக்கங்கள்
07 26 46 47

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு
ரூபா. 24,33,250/-
வெல்லப்படவில்லை
இந்த செவ்வாய்க்கிழமை
ரூபா. 29,63,600/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,37,410 | 10/- | 23,74,100/- |
| 2.இலக்கங்கள் | 21,847 | 20/- | 4,36,940/- |
| 1.இல லக்கினம் | 21,694 | 30/- | 6,50,820/- |
| 2.இல லக்கினம் | 1,939 | 100/- | 1,93,900/- |
| 3.இலக்கங்கள் | 581 | 500/- | 2,90,000/- |
| 3.இல லக்கினம் | 49 | 5,000/- | 2,45,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 2,433,250/- | - |
| | | மொத்தம் | 44,91,260/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 55,43,510/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,43,510/- தொடர் இல. 4029824 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 ஜனவரி 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5934548-5-03 |
| நுவரெலியா | 5929597-8-58 |
| மாத்தறை | 5929957-7-50 |
| மொனராகலை | 5928993-8-81 |
| மாத்தளை | 5934315-7-43 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் செல்லும் அகதிகள் அதிகரிப்பு

தனுஷ்கோடி, ஜன.16

போர் அச்சம் காரணமாக, இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்தில் படகொன்றில் வந்திறங்கிய 3 குடும்பங்களைச் சேர்ந்த பத்துப் பேருடன், கடந்த ஒருவார காலத்தினுள் இராமேஸ்வரத்தை அடைந்த அகதிகளின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையிலிருந்து அகதிகளாக வருபவர்கள் தலைக்கு மூவாயிரம் ரூபாவை வழங்கி, உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் படகுகளில் வந்து சேர்க்கின்றனர் என மண்டபம் பொலீஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் மீண்டுமொரு யுத்தம் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை தோன்றிவருவதாக அகதிகள் பலர் அங்கு தமிழகப் பொலீஸாரிடம் தெரிவித்திருக்கின்றனர். (க)


**ராஜா** யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 9.30.12.30, 3.30

**நாகம்ஸ்** சுன்னாகம்



விஷால், மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
**சண்டைக் கோழி**
தினசரி:
புதியநேரம் 10.30, 2.30, 5.30

**மனோகரா** யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலிநுட்பத்துடன்)
**ஆதி**
இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி:
பு.நே.
10.30, 1.30, 4.30, 7.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
**பரமசிவன்**
காட்சி நேரம்:
8.30, 12.00, 3.30




## கண்ணீர் அஞ்சலிகள்



மகாத்மா சனசமூக நிலைய ஸ்தாபகரில் ஒருவரும் அற்குழி ஞான வைரவர் ஆலய தர்மகர்த்தாவுமான

### பிரகாசம் இராசரத்தினம்

அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயர்அடைவதுடன்,அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(45395) மகாத்மா சன சமூக நிலையம் (சாவல்கட்டு).

## கண்ணீர் அஞ்சலி



எமது நாதன் ஆடையகத்தில் கடமை புரியும் சக ஊழியர் செல்வி பவிதா நித்தியானந்தராஜாவின் பாசமிகு தந்தை

### அமரர் கந்தையா நித்தியானந்தராஜா

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,அவரது ஆத்மா சாந்தியடைய பாற்பண்ணை வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி. (45391) நாதன் ஆடையக உரிமையாளரும் ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 18-08-1932 இறப்பு 13-01-2006

### அமரர் வீரசிங்கம் சோமசுந்தரம்

[ஓய்வுபெற்ற உப அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி]

*கோப்பாய் தெற்கு தனிப்பனை வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானத்தில் தசாப்த காலத்திற்கு மேலாக முகாமையாளராகப் பணிபுரிந்து இறை தொண்டாற்றி கடந்த 13.01.2006 அன்று இறைபதமடைந்த மதிப்பிற்குரிய வீரசிங்கம் சோமசுந்தரம் அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

உள்ளத்தில் அன்பினை வளர்த்து
கள்ளமில்லா உள்ளத்துடன் உபசரித்து - எங்கள்
எல்லா உள்ளங்களிலும் நிலைத்து - எவரும்
இல்லார்ப்போல் நாங்கள் கலங்கிட
இன்று நீர் ஆண்டவன் பாதம் தேடி .... கண்ணீரில்
எமை ஆழ்த்திச் சென்றதென்ன
வாடுகிறோம்....! கண்ணீரில் பாடுகிறோம் ....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பழைய மாணவர்கள்- Dr.V. தியாகராஜா,பி.அன்ரன்சில்வெஸ்ரர், கெ.காண்டீபன், த.ரவீந்திரன், சு.முத்துக்குமாரசாமி.*

(45390)

## 50ஆவது அகவையில் 16.01.2006

### நமசிவாயம் தர்மபாலன்



இன்று போல்
என்றும் நீடூழி
காலம் வாழ்கவென
வாழ்த்துகிறோம்

"திருப்பரம்"
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

வாழ்த்தும்
வடிவேலு உதயகுமார்,
சிவசேகரன் ரதிப்பிரியா,
பேறாமகன் சஹீர்.

(45389)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையாநாதன் மகேஸ்வரன்

(Charted Accountant- Former Partner Pope & Co)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் அவர்கள் 14.01.2006 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையாநாதன் (**memorial English School manipay**) அவர்களின் அன்பு மகனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு.திருமதி நடராசா (**Retired Oversear**) அவர்களின் அன்பு மருமகனும் நடேஸ்வரியின் அன்புக் கணவரும் விம்மூர்த்தி, கஜமூர்த்தி, **Dr.**கேந்திரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீராவின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற காராளசிங்கம் ( **Attorney at law & tax consultant**), திருமதி புவனேஸ்வரி(கனடா), திருமதி சிறிபார்வதிதேவி(**U.S.A.**), திருமதி மகாமாயதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**இந்திரன் காராளசிங்கம்**
**16, Janake Lane,**
**Colombo-4**
**T.P.:2583499**

**93, Beck ford road,**
**Croydon,**
**Surrey cro 6hz,**
**U.K.,**
**T.P.:44 - 2086569725**

### திருமதி தங்கம்மா கதிரவேலு

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி தங்கம்மா கதிரவேலு அவர்கள் 14.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் ஆசிரியர் கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பறுவதபத்தினி அம்மா வைத்தியலிங்கம் மற்றும் குமரேசு கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் விதானையார் மற்றும் ராசலட்சுமி பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயஸ்ரீதரன், நிர்மலாதேவி (மாலா), வசந்தாதேவி, கிருபாதேவி, ஜெயேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜகுலேந்திரன், ஸ்ரீபற்குணன், சித்தரஞ்சன், ரதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் கவிதா, துஷ்யந்தி, மிதுலா, ரம்யா, ஜேருசன், கவிந்தி, ஜெயக்கிருஷ்ணன், சுலக்சிகா, சக்திதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மிசிசிசாக **Dundas Erinmills** வீதிகளின் சந்திப்பில் 1981 **Dundas Street W** இல் அமைந்துள்ள **Newe Duck Funeral home** இல் 15.01.2006 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் இன்று(16.01.2006)திங்கட்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 2 மணிவரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, **St. Jhon's Dixie Cemetery & Crematorium** தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா கதிரவேலு
[illegible]
கோப்பாய்.
(சி-47371) (18-12-34)
90569605043

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா பொன்னுத்துரை



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா(இரத்தினம்) பொன்னுத்துரை அவர்கள் 14.01.2006 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மாணிக்கம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சற்குருநாதன்(யாழ்ப்பாணம்), இரதிராணி(வவுனியா),மதிவதனி,கங்காதேவி,ஜெயவதனி,அச்சுதன்,ஆதவன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினசிங்கம்(வவுனியா),கலாம்பிகை(யாழ்ப்பாணம்),பாலசுப்பிரமணியம்,மகேந்திரன்,தவராசா,கலைச்செல்வி,பகீரதி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/1,பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம். (45394)(18.12.34)
தகவல்:
பொ.சற்குருநாதன்.

### கந்தையா நித்தியானந்தராசா (நித்தி)

(கல்வியங்காடு, சைக்கிள் கடை உரிமையாளர்)



இல.25, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா நித்தியானந்தராசா நேற்று (15.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் பவளம் தம்பதியரின் மகனும் மீனலோஜினி, ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புக் கணவரும் பவிதா, பவிதன், சுதன், சுகந்தன், கண்ணா, நிவேதா, துஷ்ஷேந் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவானியின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.01.2006)திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (45394)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கந்தையா ஞானரத்தினம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புசல்லாவையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா ஞானரத்தினம் அவர்கள் 14.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் குகானந்தன் (பட்டு), சிவானந்தன் (சிவா), தையல்நாயகி(வசந்தி) ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜேஸ்வரி, கமலேஸ்வரி, கணேசமூர்த்தி ஆகியோரின் மாமியும் கேதீசன், பிரதீசன், ஜதீசன்,அருள்குமரன், குமரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2006) திங்கட்கிழமை புசல்லாவையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Roach child estate**
**Pussellawa.** (சி-47372) (18-12-34)
தகவல்:
க.குகானந்தன்(மகன்).
தொ.பே.:0776114475

### சிவஞானக்குருக்கள் சமீஜினாம்பாள்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானக்குருக்கள் சமீஜினாம்பாள் நேற்று(15.01.2006)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சிவஞானக்குருக்களின் (முன்னாள் பிரதமகுரு - இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்)அன்பு மனைவியும் ஜெகந்நாதன் சர்மா, சுந்தரலிங்கம் சர்மா, திலீபராஜக்குருக்கள், துஷ்யந்தசர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் சரோஜா, கௌரி, கல்யாணி, சிவகாமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.01.2006)திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார்
கோயிலடி. (45388) (18-12-34)
தகவல்:
சிவஸ்ரீ சி.திலீபராஜக்குருக்கள்
(மகன்).

### கணபதி நடேசு



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நடேசு அவர்கள் நேற்று(15.01.2006) ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் கணபதி -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பாக்கியத்தின் பாசமிகு கணவரும் பிரபாகரன், கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பார்வதி,கதிரவேலு, கந்தையா, மார்க்கண்டு, இலக்சுமி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற முத்தர், சின்னக்குட்டி, சண்முகம், தங்கம், சுரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.01.2006)திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி. (45393) (18-12-34)
தகவல்:
உறவினர்(நவாலி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து நீண்டதூரம் போய்விட்டது அரசு!

## சமீபத்திய சம்பவங்களே எடுத்துக்காட்டு என்கிறார் இளந்திரையன்

ஸ்ரீலங்கா அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகி நீண்டதூரம் போய் விட்டது. அரசினதும் அரச படைகளினதும் சமீப காலச் செயற்பாடுகள் இதனைத் தெட்டத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு தெரிவித்தார் மட்டு. அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளரும் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்தவருமான இளந்திரையன்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் நேற்று ஒளிபரப்பான 'நிலைவரம்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினர் தமது தற்பாதுகாப்புக்காக மக்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருக்கின்றமையானது அரசின் யுத்த நிறுத்த மீறலினுடைய புதியதொரு பரிமாணம் என்றே கொள்ளலாம்.

இது எங்களுக்கு புதிய செய்தி ஒன்றைச் சொல்கிறது. அதாவது, அவர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை விட்டு வெளியே போய் விட்டார்கள் - அரசுத் தரப்பையும் இராணுவத் தரப்பையும் பொறுத்தவரையில் அவர்கள் சொல்வது ஒன்றாகவும் செய்வது ஒன்றாகவுமே இருக்கிறது.

ஒரு புறம் இராணுவத்தினர் திருமலையில் தாக்குதல் நடத்துகிறார்கள். மறுபுறம் இராணுவத் தளபதி தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இன முரண்பாடுகள் அற்று சமாதானமாக - சமத்துவமாக - ஒற்றுமையாக - அனைவரும் வாழலாம். அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அனைவரும் சேர்ந்து கடைப்பிடிக்கலாம் என்று கூறியிருக்கிறார்.

ஒரு கையில் பூச் செண்டும் மறுகையில் கொலை வாளையும் ஏந்தி நிற்கின்ற வகையிலான இத்தகைய செயற்பாடுகள் ஸ்ரீலங்காப் படைகளுக்கு புதியனவல்ல. முன்னரே பழக்கப்பட்டவை.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகளை அறிந்திருந்த எமது மக்கள் போரை மீண்டும் தொடங்குமாறு எம்மைக் கோரினார்கள். இப்போது அவர்கள் தாமாகவே களத்தில் இறங்கிவிட்டார்கள்.

சுயநிர்ணய உரிமைக்கு குறைவான எந்தவொரு தீர்வையும் ஏற்றுக்கொள்ள தமிழ் மக்கள் தயாரில்லை என்பதை மக்களின் இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது - என்றார் இளந்திரையன். (த)

## திருமலையில் சிப்பாய் காயம்!

திருகோணமலை, ஜன.16

திருகோணமலை அன்பு வெளிபுரம் பகுதியில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் விமானப்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

பலத்த காயங்களுக்கு இலக்கான இவர் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் மூன்று பொதுமக்களும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன.16

யாழ். நாவலர் வீதியில் பழைய ரயில் பாதையடியில் உள்ள காவலரண் மீது நேற்றிரவு 7.40 மணியளவில் இனந்தெரியாதோரால் கிரனேட் வீசப்பட்டது. அது வீழ்ந்து வெடித்தது. இதில் சேதமெதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. (ஒ-6)

## ஆவணக் [illegible]ாப்பகம் நேற்றுத் திறப்பு

கிளிநொச்சி,ஜன.16

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்ல வீதியில், மத்திய சந்தைக்கு அண்மையில் தமிழீழ ஆவணக் காப்பகம் நேற்று திறந்துவைக்கப் பட்டது. தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் காப்பகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த அமைப்பு மாணவ, மாணவிகளுக்கான இலவச கல்விச் சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளது என்று இதனை அமைத்துவரும் தமிழீழ ஆவணக்காப்பகத்து பொறுப்பாளர் குரும்புசிட்டி இரா. கனகரத்தினம் தெரிவித்தார்.

## குவைத் மன்னர் காலமானார்

குவைத் நாட்டின் தேசத் தந்தையாகப் போற்றப்படும் மன்னர் ஷேக் ஜாபர் அல் அகமது அல் சபா (வயது 79) நேற்றுக் காலமானார். கடந்த 5 ஆண்டுகளாக இவர் மூளை இரத்தக்கசிவு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

## திருகோணமலையில் ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தரப்பு இணங்கியது.

திருகோணமலை பிரதிப் பொலீஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1.45 மணி வரை இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

மாவட்டத்தின் சிரேஷ்ட பொலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

தமிழர் தரப்பில் திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவைத் தலைவர் சி.விக்னேஸ்வரன் மற்றும் பேரவை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், அதிபர்கள், சட்டத்தரணிகள், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் என 42 பேர் பங்குபற்றினர்.

திருகோணமலையில் அமைதி நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஜனாதிபதி பணித்திருக்கிறார் என பாதுகாப்பு அதிகாரிகள் தரப்பில் முதலில் [illegible]விக்கப்பட்டது.

[illegible]ருமலையில் தமிழ் மக்களுக்கு எதிராக [illegible] கொடூர நடவடிக்கைகள், இராணுவக் கெடுபி[illegible]கள், ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை, உப்பு வெளியில் ஒரு வீட்டின் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒரே குடும்பத்தில் நால்வர் படுகாயமடைந்தமை, தமிழ்.மக்களைத் தாக்கிக் கொன்றுவிட்டு அவர்கள் வைத்திருந்த கைக்குண்டு வெடித்தே அவர்கள் உயிரிழந்தனர் என செய்தி பரப்புதல் போன்ற பல விடயங்களை அங்கு தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

தமிழர் தரப்பினால் ஐந்து முக்கிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்துவார்கள் என பாதுகாப்பு அதிகாரிகள் உறுதியளித்தனர்.அவை ஐந்தினதும் விவரம் வருமாறு:-

✱ இராணுவத்தினரோ, பாதுகாப்புப் பிரிவினரோ தேடுதல் மற்றும் ரோந்து நடவடிக்கைகளின் போது முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிக்கட்டிக் கொண்டுவரக்கூடாது. அவர்களது முகத்தை மக்கள் அடையாளம் காணவும், அடையாளம் காட்டவும் கூடியதாக இருக்கவேண்டும்.

✱ திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பாடசாலைகள், வணக்கத்தலங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் தங்கியிருக்கும் படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும்.

✱ ஒருவர் கைது செய்யப்படும் சமயத்தில் அவரது வீட்டாருக்கு அவர் எதற்காக, யாரால் கைதுசெய்யப்படுகின்றார் என்பதையும், அவர் கைது செய்யப்பட்டு எங்கு கொண்டு செல்லப்படுகின்றார் என்ற விவரத்தையும் எழுத்து மூலம் உரிய - தரமுடைய - அதிகாரி தெரியப்படுத்த வேண்டும்.

✱ இராணுவத்தினர் அல்லது வேறு படையினர் ரோந்து செல்லும் போது அந்த ரோந்து அணிகளில் அவர்களை விடக் கூடுதலான எண்ணிக்கையில் சிவில் நிர்வாகத்துடன் தொடர்புடையவர்களான பொலீஸார் இருப்பது கட்டாயம்.

✱ இராணுவத்தினர் அல்லது பொலீஸார் அல்லது வேறு படையினரின் பிரசன்னம் இல்லாது ஊர்காவலர்கள் எவரும் தமிழர் பகுதிகளுக்குள் நுழையவே கூடாது. எந்தச் சமயத்திலும் சுற்றிவளைப்பு, தேடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு உரிய சீருடையின்றி எந்தப் படையினரும் வரக்கூடாது. சாரம், பெனியன் அணிந்து ஆயுதங்களுடன் படையினர் முகாம்களுக்கு வெளியே வந்து நடமாடவேகூடாது.

- இந்த ஐந்து விடயங்களையும் ஏற்று உடனடியாக நடைமுறைப்படுத்தலாம் எனப் படைத்தரப்பில் உறுதியளிக்கப்பட்டதை அடுத்து ஹர்த்தாலைத் தற்காலிகமாகக் கைவிட தமிழர் தரப்பு இணங்கியுள்ளது.

இவ்விடயங்களைக் கடைப்பிடிப்பதில் ஏதேனும் தவறு நிகழ்ந்தால் உடனடியாக மீண்டும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்காமல் - அதற்கு முன்னர் உரிய படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடும்படியும் தமிழர் தரப்புக்கு பாதுகாப்புத் தரப்பினர் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

பாதுகாப்புத் தரப்பினர் தமக்கு அளித்த உறுதிமொழி பற்றிய விவரங்களைத் திருகோணமலை மாவட்ட தமிழர் தரப்பினர் நேற்று மாலை திருகோணமலை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து அவர்களுக்கு விளக்கினர்.

தமக்கு அளிக்கப்பட்ட ஐந்து உறுதிமொழி விடயங்களும் சரிவர நடைமுறைப் படுத்தப் படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும்படி தமிழர் தரப்பினர் விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தாங்கள் சாதகமாகப் பரிசீலனை செய்வர் எனக் கண்காணிப்புக் குழுத் தரப்பி[illegible] பதிலளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க)

## ஊர்காவற்றுறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்த ஆயுததாரிகள் அவரைக் கடத்திச் சென்றுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் வீசப்பட்டுக் கிடந்த சடலத்தில் அடிகாயங்கள் காணப்பட்டன என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம் விசாரணைகளை மேற்கொண்டார்.

அதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஒ-14-15-16-78-86-117)

## தமிழர் புனர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அரசாங்கத்திடம் ஜே.வி.பி. விடுத்த கோரிக்கைக்கமையவே இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழு இவ்வாரம் முதல் இயங்கவுள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணத்திலகவை தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் அமைச்சர் தினேஷ் குணவர்தன உட்பட பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

நாளைமறுதினம் புதன்கிழமையளவில் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ள இந்தத் தெரிவுக்குழு, அனைத்து அரசசார்பற்ற நிறு வனங்களுக்கும் அறிவித்தலொன்றை அனுப்பி அவர்களின் செயற்பாடுகள் மற் றும் வருடாந்த கணக்கறிக்கைகளை முதலில் கோரவுள்ளது எனத் தெரிகிறது.

இதேவேளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தத் தெரிவுக்குழுவிற்கு பதில்சொல்ல வேண்டியிருக்குமா என மேற்படி குழுவின் உறுப்பினரும், ஜே.வி.பியின் எம்.பியுமான விஜித ஹேரத்திடம் கேட்டபோது, அது நிச்சயமாக இடம்பெற வேண்டுமென அவர் பதிலளித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனமாக இருந்தபோதிலும், உள்நாட்டில் அதன் செயற்பாடுகள் கண்காணிக்கப்படுமென்று குறிப்பிட்ட அவர், செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளும் மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஆராயப் படுமென்றும் கூறினார். (க)

## மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிக்கவிருக்கிறார் எனத் தெரிகின்றது.

மறுபுறம் தேர்தலில் ஜே.வி.பியுடன் இணைந்து தமது சுதந்திரக் கட்சி போட்டியிட வேண்டும் என்பதில் வெகுவாக ஆர்வம் கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தனக்கு நெருக்கமானவர்களைக் களமிறக்கத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் கட்சியைத் தாம் மறுசீரமைக்கப் போகிறார் எனவும் கட்சித் தலைவி சந்திரிகா தன்க்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

இவ்வாறான பின்னணியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விவகாரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் பூகம்பமாக வெடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கமே இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## தமிழ்க்கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது, திருகோணமலை சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற விவாதத்தைக் கோருவதற்கான யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## வடக்கு - கிழக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கில் ஆங்காங்கே இடம்பெறும் தாக்குதல் சம்பவங்கள் பெரும் போராக வெடிக்கலாம் எனக் கருதப்படும் நிலையில்-

வடக்கு - கிழக்கில் கடற்படையினரே இந்தத் தாக்குதலில் அதிகம் சிக்கும் பின்னணியில் -

கடற்படை உயரதிகாரியாக அண்மைக் காலம் வரை பணியாற்றிய ஒருவரை வடக்கு- கிழக்கு ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

## ஆளுங்கட்சி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற பிரதம கொரடாவும், அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கேட்டிருக்கின்றார்.

வரவு - செலவுத் திட்ட விவாதம் முன்னர் நடைபெற்ற காரணத்தினால் ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நீண்ட நாள்களாக இடம்பெறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

BRIGHTMAN
LOGIC - 2008
பிரிவு I - Sun. 10 a.m.
பிரிவு II - Sun. 2 p.m.
15.01.2006
By: P. கமல்

விற்பனையாகின்றது
விரைவில் நடைபெறவுள்ள
ஆவண உதவியாளர் போட்டிப்
பரீட்சை வழிகாட்டி நூல்
P. உமாசங்கர்
☞ பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணிய, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலைகள்.
(45348)(17-34)

## மரண அறிவித்தல்

### மடுத்தீன் அந்தோனிப்பர்னாந்து
### (பொன்னுத்தம்பி)



மண்டைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 226, பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பர்னாந்து நேற்று (15.01.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மடுத்தீன் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிமுத்து - றோசம்மா தம்பதியரின் மருமகனும் செலினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மருசலினம்மா மற்றும் சிங்கராயர் (பிரான்ஸ்), பாக்கியநாதர் (கனடா), மரியகுசை (லண்டன்), திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழக்கோன் (கணக்காளர்- லண்டன்), யசிந்தா, மேரிமார்கிறேற், பிரான்சிஸ் சேவியர், மேரிறோஸ், அருட் திரு. அன்ரனிப்பிள்ளை (பங்குத்தந்தை, மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தா (லண்டன்), பாலசிங்கம், சூசைதாஸ், யுவக்கீன் பிள்ளை, லில்லி மாகிறேற் ஆகியோரின் அன்பு மாமனும் Dr. ஷிரான் (லண்டன்), பிறெண்டா (மருத்துவ பீட மாணவி, லண்டன்), சரோஜினி (ஜேர்மனி), அருட் சகோ. நிர்மல றஞ்சினி (தி.கு.) சாமினி, றூபினி, உஷாந்தினி, சுரேஸ் (F.R.C. நிறுவனம்), சுதாசன், சுகந்தன், சுலக்ஷனா, சுலக்ஷன், மிக்சன் அருட் சகோ. கிருபதர்சினி (தி.கு.), அனோஜினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 226, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (45396)(17-34)

தகவல்:-
அருட் திரு.அ.ப. அன்ரனிப்பிள்ளை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org